தமிழ்ப் பொழில்

தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச் சங்கத் திங்கள் வெளியீடு

துணர் ௪௬	திருவள்ளுவர் யாண்டு ௨௲௩ பரிதாபி, ஆவணி (1972 — ஆகஸ்டு — செப்டம்பர்)	மலர் ௫

சுதந்திர வெள்ளி விழா

நம் நாடு சுதந்திரம் பெறுவதற்குத் தொண்டாற்றிய அனைவருக்கும் நம் நன்றியைச் செலுத்துவோமாக.

இந்த இருபத்தைந்து ஆண்டுகளில் நம்நாடு பலதுறைகளில் முன்னேற்ற மடைந்திருக்கின்றது. அரசியல் துறையில் நான்கு பொதுத்தேர்தல்கள் நடைபெற்றன. ஆங்காங்கே சில குறைகள் தோன்றினும், மற்ற நாடுகள் சிலவற்றை ஒப்பிட்டுப் பார்த்தால் நம் நாட்டில் மக்களாட்சி பொதுவாக நல்லமுறையில் செயல்பட்டு வருகிறதென்றே கூறலாம். வேளாண்மை, தொழில் கல்வி, உடல் நலம் போன்ற துறைகளில் நல்ல முன்னேற்ற மடைந்திருக்கின்றது. உணவு உற்பத்தி இருமடங்கும், தொழில் 160 சதவீதமும், கல்வி வசதிகள் மூன்று பங்கும் வளர்ந்துள்ளன. எனினும் நூற்றுக்கு எண்பதின்மர் வாழும் நாட்டுப் புறத்தில் நூற்றுக்கு தொண்ணூறு அளவில் வேளாண்மைத் தொழிலில் ஈடுபட்டுள்ள ஏழை மக்களின் முன்னேற்றத்தையே உறைகல்லாகக் கொள்வது ஏற்றதாகும். கீழ்மட்டங்களிலுள்ள இவ்வேழை மக்களின் வாழ்க்கைத்தரத்தின் முன்னேற்றம் மிகக் குறைவென்றே சொல்லவேண்டும். இதற்குப் பொருளாதார நிபுணர்கள் கூறும் காரணங்கள் பல. அவைகளை நீக்க முயற்சிகள் அரசு மேற்கொள்ளுமென்பதில் ஐயமில்லை. ஏழைத் தொழிலாளி மக்கள் தங்களின் ஊதியத்தில் கணிசமானபகுதியை கள் முதலியன குடிப்பதில் செலவிடுகின்றனர். எனவே வரும் அரை நூற்றுண்டின் இறுதிக்குள் ஊதியம் பெருகினும் அவர்கள் வாழ்க்கைத்தரம் மேலும் உண்மையாகவே உயருமா வென்பது ஐயப்பாட்டுக்குரியதாகும்.

தமிழ் நாட்டில் பிறந்த நாம் தமிழ் மொழி வளர்ச்சியையும் கருதுவது இயற்கையே. சுதந்திரம் பெற்றபின் சில துறைகளில் தமிழ் மொழி முன்னேற்றம் அடைந்துள்ளது. சுதந்திரம் பெறு முன் தோன்றியுள்ள இலக்கியங்கள் போன்று அவ்வளவு உயரிய இலக்கியங்கள் இப்பால் தோன்றவில்லை யெனின் மிகையாகாது. எனினும் புதினம், சிறுகதை உரைநடை முதலிய துறைகளில் கணிசமான அளவு வளர்ச்சி ஏற்பட்டுள்ளது. சில சிறந்த தனிப்பாடல்களும், வசன கவிதைகளும் தோன்றியுள்ளன. கவியரங்கங்கள் வளர்கின்றன. கல்லூரிகளிலும் தமிழ் ஒரு பயிற்சிமொழியாகி வளர்கிறது. ஆட்சி மொழியாகவும் அரசு அலுவலகங்களிலெல்லாம் கையாளப்பெற்று வருகிறது. குறிப் பாக இப்போதுள்ள தமிழ் நாட்டரசின் ஆதரவினால் தமிழ் மொழி பல்லாற்றானும் ஆக்கம் பெற்று வருகிறது.

இவ்வெள்ளி விழாவின் குறிக்கோள்களில் ஒன்று மக்களெல் லோரும் மேலும் நாட்டு நலனுக்காக பாடுபட இவ்வமயத்தில் மீண்டும் உறுதி மேற்கொள்ள வேண்டு மென்பது. இதை அனுபவத்தில செய்யும் முறை அவரவர்கள் தங்கள் பணிகளைச் செவ்வனே செய்வதாகும். அவரவர் பெறும் ஊதியம், உயர்வு ஆதரவு. ஆக்கம், நன்மைகள் ஒருபுறமிருக்க, அவர்கள் செய்யும் பணியை நாட்டின் நலனுக்காக இதைச் செம்மையாகச் செய்ய வேண்டுமென்ற மனநிறைவுடனும் கடமை உணர்ச்சியுடனும் செய்யும் பண்பினை வளர்ப்பது இக்குறிக்கோளை நிறைவேற்ற நல்ல வழியாகும்.

நம் நாட்டில் காலந்தாழ்த்தல் என்பது நமக்கே உரிய பண்பாக ஒன்றி விட்டது. பொதுமக்கள் கூட்டங்களிலும் பிற நிகழ்ச்சிகளிலும் பல மணி நேரத்தைக் காலத்தாழ்வினால் வீண் செய்வதை நாமெல்லாம் நன்கறிவோம் இந்த வெள்ளி விழாவின் போது எந்தச் செயலையும் நிகழ்ச்சியையும் குறித்த காலத்தில் செய்து காலந்தவறாமை என்ற பண்பினை வளர்க்க நோன்பு மேற்கொள்வோமாக.

இராமலிங்க அடிகளாரின் இசைப்பாடல்கள்

புலவர். தி. நா. அறிவு ஒளி,
திருக்கழுக்குன்றம்.

(முன் இதழ் தொடர்ச்சி)

தரவு, தாழிசை அராகம்; அம்போதரங்கம், சுரிதகம் என்னும் கலிப்பா உறுப்புகளும், முதனிலை, இடைநிலை, முரி நிலை என்னும் இசையுருப்படிகள் அமைப்பும் தொடர்புடையவை கலிப்பாயாப்பின் வழி மலர்ந்த இசைப்பா யாப்பு. பிறமொழி இசையுரு வடிவங்களாகச் செழித்துள்ளன

ஆடற்பாடல், அவிநயப் பாடல் கூத்துப் பாடல, கவுத்துவப் பாடல் மெய்ப் பாட்டுப் பாடல், கதைப் பாடல், முகவைப் பாட்டு, ஏர்ப்பாட்டு, கப்பற் பாட்டு, அம்மானை, கழங்கு சாழல். தெள்ளேணம், வள்ளைப் பாட்டு (உலக்கைப் பாட்டு) குயிற் பாட்டு. சுண்ணப் பாட்டு, விளையாடற் பாட்டு ஆகியவைகளும் இசைத் தமிழ்ப் பாவடிவங்களாகும்.

நெல்லை தண்டபாணியடிகள் வண்ணப்பாத் துறையில் பெரு வெற்றி கண்டவர். பலர் பல்வகை வண்ணங்கள் பாடி இசைத் திருப்பணியாற்றியுள்ளனர். ஆண்கலை, பெண்கலை என்னும் உறுப்புகளோடு நெடிதாக அமையும் வண்ணங்கள் தமிழின் சொல்லிசைவு, யாப்பருமைகளுக்கு அரிய எடுத்துச் காட்டாகும்.

1 "தய்யத் தனன தத்த தனத்தந் தானன
தய்யத் தனன தத்த தனத்தந் தானன
தத்தன தத்தந்தன
தத்தன தத்தந்தன
தத்தன தத்தந்தன
தத் தந்தனதான தனதான தந்ததத்தந் தானனு"

2 "தானதத்த தத்ததத்த தானதத்த தத்த தத்த
தானதத்த தத்ததத்த தானதத்த தத்ததத்த
தனத்தன தந்ததன தனத்தன தந்ததன
தனத்தன தந்ததன தனத்தன தந்ததன
தானதன தானதன தானதன தானதன
தானதன தானதன தத்ததன தான
தனதான தனனதன தானனு."

3. "தானன தந்தனனு தனதான தந்தனனு — தன
தான தந்தன தானதந்தன தானதந்தன
தந்ததந்தான
தனதன தன்னுன தனனு"

4. "தனதன தத்தன தானதந்தன தனதன தத்தன
— தான தந்தன
தனன தனனதன தனனதன்ன தன
தனன தனனதன தான தானன
தான தனதந்த தன தானனு."

5. "தனதன தத்த தான தானன தனத்த தந்த
தனதன தத்த தான தானன தனத்த தந்த
தனன தந்த தான தனனதந்த தந்த தான
தனன தந்த தந்த தான தனன தந்த தனதனு
தனதாந்த தனதான தாத்தனு,"

6. "தான தனந்தன தானதனந்தன தையத்தாத்
தானதந்தன
தான தனந்தன தான தனந்தன தையத் தாத்
தானதந்தன
தத்தத்தா தாந்தனத்தன தத்தத்தா தாந்தனத்தன
தாந்தனந்தன தாந்தனந்தன தாந்தனந்தன
தாந்தனந்தன
தனதன தனதன தனதன தனதன
தனதன தனதன தனன தனதான
தனதானத்தன தானதனன தந்தனு."

என்னுந் சந்தக்குழிப்புகளில் புகழ்வாய்ந்த வண்ணப் பாக்கள் மலர்ந்துள்ளன.

இசைப் பாடல் கலைத்திறன் 'இசைப் பாடல்' உள்ளங்கவரும் இயல்பினது. செய்யுளைப் போன்றே 'கலைமுறை'யில் உயர்ந்தது. யாப்போடு இசைவளமும் பாணிநலமும் (தாள நலம்) மெய்ப்பாட்டெழிலும் பொருளமைதியும் இசைப்பாவில் இசைந்தொளிர வேண்டும். சந்தமும் வண்ணமும் அறிவையும் உணர்வையும் குழைந்திழைந்தியைந்துருசச் செய்வன

இசைப்பாவில் சொற்களின் இசைவும் எதுகைகளும், மோனைகளும் சந்தத்திற்கேற்பவும் பண்ணுக்கேற்பவும் பொருந்தியமைதல் வேண்டும்

சொற்பொருள். சொற்கள் ஒன்றும் பலவும் தொடர்ந்து அமையும் போது அவை பொருள் உணர்த்தும் சொற் சிறப்பால் சொல் உயிர்த்தன்மை உறுவதும் வழக்கமாகும்.

பொருளுணர்த்தும் வகை இரண்டாகும்

1. சொல்லால் பொருள் புலப்படுதல்

2. சொற்றொடர்ச்சியால், குறிப்பால் பொருள் விளக்குதல்.

உலகில் வழங்கும் மக்கட் பேச்சு முறை இவ்விரு திறத்துள்ளும் அடங்கும். பழமொழி, மந்திரம் ஆகிய சொற்களில் பொருளுமிருக்கும்; பொருளற்றவையுமிருக்கும்

சொல், முன்னமைவன, பின்வருவன, முடிபின்கண் நிற்பன என்ற மூன்று நிலைத் தொடர்பால் ஒழுங்கான பொருளுணர்ச்சியை விளைவிக்கும் இம்முறை மாறினால் தவறான பொருள் அமையலாம், அல்லது பொருளற்றதாகலாம். எழுத்திலும் பேச்சிலும் சொல்லமையும் மரபு தொன்று தொட்டுப் பண்பட்டு நிற்பதால் மொழியின் இயக்கம் செழிக்கிறது மொழியின் நடைவளம், இலக்கியச் செழுமையெல்லாம் 'சொல்' என்ற வள்ளலின் ஈகையேயாம். இதனை,

"சொல்லாற் றெரிதல் குறிப்பினாற்றோன்றுதலென்
றெல்லாப் பொருளும் இரண்டாகும் - மெல்லியலாய்!
தொன்மொழியும் மந்திரமும் சொற்பொருள் தோன்றுதலின்
இன்மையும் உண்மையுமாம் ஈங்கு." (நேமிநாதம் - 69)

எனக் குணவீரப் புலவர் கூறுகிறார். இசைப் பாவில் பொருளமைவும் இந் நெறியில் அமையும். சொல்லாலும், சொல்லுக்குப் புறனாகக் குறிப்பாலும் பொருளுணர்த்தும். 'காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்' என்னும் பழமொழி சொல்லளவிற் காணும் போது 'நெல்லைக் களத்தில் காற்று வீசும் பொழுதில் தூற்றி மணி வேறாகவும் பதர் வேறாகவும் பிரித்தல் வேண்டும்' என்ற பொருளைத் தரும். ஆயின், குறிப்புப் பொருளாகத் 'தக்க வாய்ப்பு நேருங்கால், நமக்கு ஆக்கந்தரும் வினையைச் செய்துகொள்ள வேண்டும்' என்பது அமைகிறது! இசைப்பாவில் கூட இவ்விரு நிலையிற் பொருள் அமையலாம்.

உயிர், இசையால் மயங்குகிறது; பெண்ணழகால் வியப்பெழுச்சியுறுகிறது; நட்புணர்வால் ஆறுதலின்பமெய்துகிறது;

இயற்கை யெழிலால் தவப் பேரின்ப மடைகிறது; இலக்கியக் கலைகளால் புத்துணர்ச்சி பெறுகிறது: அக—புறப்—பொருளால் அமைதியடைகிறது; இசையால் ஒருமையுறுகிறது. உயிரை, உணர்வை, உடலை இயக்கும், இணைக்கும் இன்புறச் செய்யும் இன்னிசைச் கலை அறிவு பெற்ற பெறலரும் பேரின்பப் பேறும்; வாழ்வின் திருவாழ்வாகும்!

இத்தகு பின்னணிச் சூழ்நிலைகளின் முன்னே வடலூர் அடிகளின் இன்னிசை உருப்படிகள் அரும்பின. அருட்பா முழுவதையுமே இசையோடு பாடலாம். ஆயினும். இசையுருக்களாக அமைந்தவற்றைக் குறித்து இவண் ஆய்வோம்.

இசை உருப்படி வகை. அருட்பாவின் இசை உருக்களை ஏழு வகைத் தலைப்புள் அடக்குவர்

(1) **கண்ணிகள்:** 1. பாங்கிமார் கண்ணி. 2 வெண்ணிலாக் கண்ணி. 3. முறையீட்டுக் கண்ணி. 4 திருவடிக் கண்ணி, 5. பேரன்புக் கண்ணி ஆகியவையாம். (தாயுமானவர், பட்டினத்தார். சித்தர்கள், திரிகூடராசப்பக் கவிராயர் ஆகியோர் 'கண்ணி' யாப்பு வடிவத்தைப் பயன்படுத்தி வெற்றி பெற்றோராவர். அவ்வடிவில் ஒரு கவர்ச்சியுண்டு. தன்னுணர் வெழுச்சிகளை வெளியிடக் கண்ணி வடிவம் மிகப் பயன்படுவதாகும்)

(2) **ஆடற் பாடல்கள்:** 1 சிலதா சம்வாதம். 2 வினாவிடை, 3. நடேசர் கும்மி, 4 சண்முகர் கும்மி, 5. பந்தாடல், 6. திருவுந்தியார். 7. உபதேச வினா, 8. நெஞ்சொடுநேர்தல், 9. மங்களம், (மகளிர் விளையாட்டு ஆயத்திலும் அரங்கிலும் ஆடுங்காற் பாடப் பயன்படும் பாக்களாயமைந்தவை.)

(3) **வருகைப் பாக்கள்:** 1. சண்முகர் வருகை. 2. அம்பலவாணர் வருகை. 3 அம்பலவாணர் ஆட வருகை. 4. அம்பலவாணர் அணைய வருகை.

(4) **ஆனந்தக் களிப்புகள்:** 1. நல்ல மருந்து. 2. ஞான மருந்து. 3. சிவசிவசோதி, 4 சோதியுட்சோதி, 5. ஆடிய பாதம், 6. அருள் அற்புதம், 7. ஆணிப் பொன்னம்பலம், 8 அருட்காட்சி, 9 ஆனந்தப் பரிவு; 10. மெய்யருள் வியப்பு.

(5) **பண்கள்:** 1. வளர்பதி விளக்கம், 2. ஞானோபதேசம், 3. ஆரமுதப்பேறு.

(6) இசையுருப்படிகள் (கீர்த்தனங்கள்) எட்டுப் பாக்கள். (Musical Compositions)

இவ்விசைப் பாக்கள் எல்லாம் இறையன்புச் சுவை கனிந்தவை. சில அகப்பொருள் தழுவிப் பேரின்பச் சுவையூட்டுபவையாம். வடலூரார் காலத்தில் கந்த புராணக் கீர்த்தனை, இராம நாடகக் கீர்த்தனை, பெரிய புராணக் கீர்த்தனை, நந்தனார் நாடகக் கீர்த்தனை, சருவ சமய சமரசக் கீர்த்தனை போன்ற பல நூல்கள் வெளி வந்தன; அரங்கேறி முழங்கின. அவற்றின் போக்கு இவர் பாக்களிலும் இருக்கக்கூடும். இவர் உருக்களில் இலக்கியத் தன்மையினும், அரும் பொருளுணர்த்தும் எளிமையுற்ற தன்மையே உள்ளது. மூச்சுக் காற்று அடக்கும்முறை, தவநெறி, இறையுணர்வு விளக்கங்கள், சிவநெறிக் கருத்துக்கள், போற்றிப் பாக்கள் எனப் பாவின் கருத்துக்கள் உள்ளன.

எடுப்பின் இனிமை: பாடற்கியைந்த பண்ணமைதல் இசைப்பாவில் இன்றியமையாத இயல்பாகும். இராமலிங்கர் உருக்கள் பண்ணோடு கனிந்த பாடல்களேயாகும். எடுப்பு (பல்லவி) அமைப்பதில் தன்னிகரற்ற திறமையினை அடிகளார் பாக்களில் காண்கிறோம். ஒவ்வோர் எடுப்பும் உள்ளங் கவர்வனவாயுள்ளன. (சில தவிர!)

(1) "இன்னந் தயவு வரவிலையா? உனக்கென்மீதில் என்ன வர்மஞ் சொலையா."

(2) "அஞ்சாதே நெஞ்சே அஞ்சாதே."

(3) "தெண்டனிட்டேனென்று சொல்லடி — சுவாமிக்கு நான்
தெண்டனிட்டேனென்று சொல்லடி!"

(4) "வருவா ரழைத்து வாடி வடலூர் வடதிசைக்கே
வந்தாற் பெறலாம் நல்ல வரமே!"

(5) "இவர்க்கு மெனக்கும் பெருவழக்கிருக்கின்றது
என்றுந் தீரா வழக்குக் காணடி!

(6) "இது நல்ல தருணம் அருள்செய்ய
இது நல்ல தருணம் —"

(7) "எனக்கும் உனக்கும் இசைந்த பொருத்தம்
என்ன பொருத்தமோ? இந்தப் பொருத்தம்
உலகிற் பிறருக் கெய்தும் பொருத்தமோ?

(இவ்வெடுப்புள்ள பாடலில் 100 முரி நிலைகள் (சரணம்) அமைந்துள்ளன. இசைப் பாக்களுள் 100 முரி நிலையுளமைந்த நனி மிகப் பெரிய பாட்டு இஃதொன்றே எனலாம். இவ்வளவு நெடிய பாவை முழுதும் இசைக்க இயலுமா என்பது ஆய்தற்குரியதாம் தம் மனவுணர்ச்சி வழி கடல் மடை திறந்தாற் போல அடிகளார் வியக்கும் வகையில் பாடியுள்ளார்)

(8) "நல்ல மருந் திம்மருந்து சுகம்
நல்கும் வைத்திய நாத மருந்து"

(9) "ஆணிப் பொன்னம்பலந்தே கண்ட காட்சிகள்
அற்புதக் காட்சியடி — அம்மா
அற்புதக் காட்சியடி!

(10) "ஆடிய பாதம் மன்றுடிய பாதம்."

(11) "வானத்தின் மீது மயிலாடக் கண்டேன்
மயில்குயி லாச்சுதடி — அக்கச்சி
மயில்குயி லாச்சுதடி!

(12) "உரைவளர் கலையே கலை வளருணையே"

(வளர்பதி விளக்கம்)

இப்பாடல் சிலப்பதிகாரக் கானல் வரியில் அமைந்த "பொழில்தரு நறுமலரே" எனத் தொடங்கும் வரிப்பாடல்களின் யாப்பு, ஓசை, அமைப்பு ஆகியவற்றைத் தழுவி இயற்றப் பெற்றுள்ளது. வரிப்பாடலில் அடிகளாருக்கிருந்த புலமையும் ஈடுபாடும் உணரத்தக்கதாகும்.

பெருமிதமான எடுப்பினுலேயே இசையுருப்படியின் இனிமை வெற்றி பன்மடங்கு சிறக்கிறது. முரி நிலைகளின் முடிவு, எடுப்பின் முத்தாய்ப் பால் அழகாக முற்றுப்பெறும் அவ்வாறு மடங்கி முத்தாய்ப்பு பெறும்போது இசைப்பாவின் இனிய அழகு மயக்கம் நனி ஓங்கி மிளிரும், அக்கலை நுணுக்கம் தெளிந்து வள்ளலார் தம் உருப்படிகளின் முக நிலைகளை யாத்த திறம், அழகு, தொழிற்றிறம், யாப்பருமை நினைக்கத் தக்கவாம்.

இசைப்பாவின் நயம். பெரும்பான்மை உருப்படிகள் தில்லைப் பொன்னம்பலத்துள் திருநடநவிற்றும் அம்பலவாணரைப் பாட்டுடைத் தலைவராகப் போற்றுகின்றன. சில பாக்கள் அகப்பொருள் நுட்பமமைந்து திகழ்கின்றன.

காதலிக்கும் காதலனுக்கும் ஊடல் நேர்வது பேரின்பமளிக்கும் வாழ்வுணர்வாகும். 'ஊடுதல் காமத்திற்கின்பம்' என்பர் குறளாசிரியர். ஊடல் பொருளமைந்த அகப்பொருட்டுறைகள் தமிழில் உணர்வுச் சுடரூற்றுக்களாக அமைந்துள்ளன. இராமலிங்கர் தன்னைத் தலைவியாகவும், இறைவனைத் தலைவனாகவும் உருவகம் செய்து உயிரினிக்க உணர்வினிக்க நறும்பாக்கள் நல்கியுள்ளார்.

மாலையிட்ட மணவாளர், மனத்துக்கினியவளை மறந்துவிட்டார்; எங்கோ சென்றார். 'இதோ வருகிறேன்' எனக் கூறி விடை பெற்றார். அவர் பேச்சை நம்பினாள் தலைவி, சென்றவர் சென்றவர்தான்! தலைவர் போன இடத்தில் தலைவரை யார் தடுத்து நிறுத்தி விட்டார்களோ, தெரியவில்லை. அன்று பிரிந்து சென்றவர், தானே இன்று தலைவி முன் வந்து நிற்கின்றார். தலைவி, தன் தோழியினிடத்தில், "அடியே, என்னைப் பிரிந்த தலைவர் வந்துவிட்டார்; இனி அவர் என்னைப் பிரிய நான் பொறேன். ஆகவே, இந்தக் கதவை மூடு; இவர் எவ்வாறு வெளிப் போவார் எனப் பார்க்கிறேன்!" என வஞ்சினங் கூறி வழக்காடுகிறாள். 'எனக்கும் அவருக்கும் பெரிய வழக்கிருக்கிறது அது எந்நாளும் தீரா வழக்கு! அவர் பிரிவினால் ஊரினர் என்னை அவர் தூற்றினர். அன்று போனவர் இன்று வந்தார். இவர் சூதினை அறியாமல் முன்னே ஏமாந்தேன்; இனி ஏமாற மாட்டேன். எங்கும் அவர் செல்ல இசையேன். கதவை மூடு!" "நான் சின்ன வயதுடையவளாயிருந்த போது தலைவர் என்னைச் சேர்ந்தார் புன்னகையோடு சிரித்தவர் நல்லவரென நானும் நம்பினேன். ஆனால் நான் துன்பத்தால் துடிக்கும் வண்ணம் பிரிந்து போனவர், அருள் உணர்வு கொண்டு இன்று வந்தார் இவர்க்கு ஈடானவர் எவர் இருப்பார்? என்னைவிட்டுத் தலைவர் இனி எப்படிப் போக முடியும்? இந்தக் கதவை மூடு; இரட்டைத் தாழ்ப்பாளைப் போடு!" எனக் கூறுகிறாள். இவ்வகப் பொருள் மெய்யுணர்வுப் பொருட் செறிவுடையதாகத் திகழ்கிறது.

உயிர், இறையைப் பிரிந்து தவிப்பதனையும், இறையருள் தானாகக் கனிந்து உயிரை உய்விக்க வருவதனையும், அவ்வருகையை உயிர் புரிந்து கொண்டு, மெய்யறிவோடு இறைவனை விடாது பற்றிக் கொண்டு இரண்டறக் கலந்து வீடுபேறு பெற வேண்டுமென்னும் நுண் பொருளமைந்துள்ளமை உய்த்துணரத் தக்கதாகும்.

" எவர்க்கும் பெரியவர் பொன்னம்பலத்தே நடம்
இட்டாரெனக்கு மாலையிட்டார் இதோ வந்தார் ! "

என முன்னரே இறைவன் தன்னை வரைந்து கொண்டதைக் குறிப்பார்.

தலைவனுக்குத் தலைவிமீது சினம். அதனால் ஊடல் விளைந்தது. தலைவிக்குத் தன்குறை புரிந்தது. தானே இரங்கித் தலைவன் தாள் பணிந்து, அருள் புரிய வேண்டுகிறாள். மனந் திருந்த வருந்தி மன்றாடுபவரை மன்னித்தருள் புரிவதுதானே முறை? இறைவனுக்கு அருளுணர்வு தோன்றவில்லை. தலைவிக்குக் கூறொணா ஆற்றாமை! கழி விரக்கத்தோடு தலைவனிடம் மன்றாடுகிறாள்.

" இன்னந் தயவு வரவில்லையா? — உனக்கென்மீது
என்ன வர்மம் சொலையா? "

தில்லைப் பொன்னம்பலத்திலாடும் அரசே! எனப் பலமுறை அலறினேன். சின்னஞ் சிறு வயதினளாக இருந்த காலத்திலே என்னை அடிமையாக ஏற்றுக் கொண்ட சிவமே. முன்னே தவறு கண்டபோது பொறுத்தருள் புரிந்ததுபோல இனியும் பொறுத்தருளாதிருப்பது முறையாகுமா? தன்னையறியாதவள் நான். என்னைத் துன்புறச் செய்வது உன்னுயர்வுக்குத் தகுதியோ? முன்னே மகிழ்வோடு என்னை ஆட்கொண்டீர் அருள் செய்தீர்: மணந்து கொண்ட பிறகு என் குலத்தை ஆராய்ந்து குறை பேசுவாருண்டோ? நீரல்லரோ எனக்குக் குரு? இன்னமும் அருள் வரவில்லையா? " என்கிறாள் தலைவி

உயிரின் மாசகளை நீக்கிக் கொள்ள அறியாத மாயையில் தவிக்குங்கால், குற்றம் பாராது தானே வந்து அருள் கருதல் வேண்டுமெனவும், உயிரின்பால் இறைவன் அருள் சுரக்காதிருப்பது முறையன்று எனவும் முறைமீடு செய்வது இப்பாட்டு. ஆணவங் கெட்டு திருவருளுக்கு ஆட்படும் பதமான நிலையைப் பாடலில் படம் பிடித்துக் காட்டுகிறார் அடிகளார்.

கற்பனையழகோடு, தவநிலை, மூச்சுக்கலையின் அடைவுகள், அமிழ்தை உச்சிக்கேற்றி, அறிதுயிலில் ஈடுபடல் ஆகியவற்றை இசைப் பாடலில் குறிக்கிறார் வடலூரார்! " ஆணிப் பொன்னம்பலத்தே " எனத் தொடங்கும் பாட்டும், 'வானத்தின்மீது மயிலாடக் கண்டேன் ; மயில் குயிலாச்சுதடி ' எனத் தொடங்கும் பாடலும் ஒப்பற்ற படைப்புக்களாகும்.

அருட்சுவை நனி சொட்டச் சொட்டப் பாடிய இசைப் பாக்கள் உள்ளம் உருக்கி நம் கள்ளந் தொலைக்கும் கருத்தழகு கனிந்தவையாகும். இறைவன் திருவடிச் சிறப்பை "ஆடிய பாதம்" என்னும் பாடல் உணர்த்துகிறது.

"மறைகள் தேடியதும் அன்பர்க்குத் தித்திப்பதும், மாதவன் முதலியோர் காணற் கரியதும், வல்வினை தீர்ப்பதும், தெய்வங்களே கண்டின் புறுவதும். வாரா வரவானதும், வஞ்ச நெஞ்சில் வாழாததும். ஆரா அமுதாகி அண்ணிப்பதும், அனபரகத்தே அமர்வதும், தன் பாடலில் நயந்திருப்பதும் நாத முடிவில் நடிப்பதும், எள்ளுக்குள் எண்ணெய் போலிருப்பதும் அச்சந் தவிர்த்தாட் கொள்ளுவதும், ஓங்காரத் தொளிர்வதும் ஆருயிர்க் கடிப்படையாவதும். அண்ட — பிண்டங்கள் அளிப்பதும், முதலிய பல நலங்கனிந்தது ஆவலையொழித்துப் பற்றற்றான் திருவடி பற்றியவர்க்கு இறைவனின் திருவடிகளாம்"

வடலூரரார் இசைப் பாக்களில் 'இயைபுத் தொடையழகும், ஈற்றுச் சீர் எதுகை நலமும் அருமையாக ஒளிர்கின்றன. செயற்கையின்றி நல்லியல்போடு அவை பொருந்தி முறை சிறந்து மிளிர்கின்றன.

'தெண்டனிட்டேனென்று சொல்லடி - சுவாமிக்கு' என்னும் அரிய இசைப்பாடல் சுவை நலங் கனிந்ததாகும். 'தண்டலை விளங்குந் தில்லைத் தலத்தில் பொன்னம்பலத்தே கண்டவர் மயங்க வேடங்கட்டி யாடுகின்றவர்க்கு' அடிகளார் (தலைவி) தெண்டனிடுகிறார்!

"கற்பூர வாசம் வீசும் பொற்பாந் திருமுகத்தே
கனிந்தபுன்னகையாடக் கருணைக்கடைக்கணுட
அற்பார் பொன்னம்பலத்தே ஆனந்தத் தாண்டவம்
ஆடிக்கொண்டேயென்னை ஆட்டங் கண்டவர்க்குத்"

தெண்டனிட்டேன் என்று சொல்லடி' என்கிறார் அடிகளார்.

ஒப்புமை நோக்கு. இறைவன் அடியாருக்குத் துன்பம் தருகிறான்; கொடுத்த பொருளைப் பறித்துக் கொள்கிறான், வாழ்ந்தாரை மேன்மேலும் வாழச் செய்கிறான்; தாழ்ந்தாரை யடிக்கடி தாழக் காண்கிறான்; இதெல்லாம் என்ன முறை கேடு? இதுவா திருவிளையாட்டு? என உருகுகிறார். நல்லோர் நலியவும்,

அல்லோர் பொலியவும் கூடிய சூழ் நிலையை எண்ணி உலகச் சான்ருேர் பலர் நொந்துள்ளனர் நம்மாழ்வார் இதே போலும் வினக்களைத் தமது திருநாலாயிரத்துள், 'நண்ணுதார் முறுவலிப்ப. நல்லுற்ருர் கரைந்தேங்க' எனத் தொடங்கும் பாசுரத்துள் வினவுகின்ருர்.

Gerard Manley Hapkins (1844—1889) என்னும் ஆங்கிலப் பாவலரும் "Thou art Indeed Just Lord" என்னும் பாடலில் மேற்குறித்த கருத்தோட்டத்தினை அமைத்துப் பாடியுள்ளமை ஒப்பிட்டு உணரத்தக்கதாம்.

"Why do siuner's ways prosper? and why must
Disappointment all I endeavour end?

என்னும் வினக்குறிப்பு வடலூராரின் பாட்டின் உள்ளொலியோடு ஒத்த கருத்துடன் ஒலிக்கிறது 'சான்ருேர் சான்ருேர் பாலராப' என்னும் நறுங் கருத்தின் உண்மை இத்தகு ஒத்த கருத்துகளால் தெளிவாகும்.

தாய் வயிற்றிற் பிறவாது தானே முளைத்தவரைப் பிட்டுக் காசைப் பட்டுப் பிரம்படி பட்டவரைப் — பிள்ளைக் கறிக் காசை கொண்ட கள்ளத் தவ வேடரைப். பாட்டுக் காசைப்பட்டு முன்னம் பரவை தன் வாயிலிற் போய்ப் பண்பு ரைந்துத் தூதனென்றே பட்டங் கட்டிக் கொண்டவரைப்' பாராட்டுகின்ருர் !

தலைவன் — தலைவி மரபை மட்டுமன்றித் தலைவன்— தொண்டன் மரபை யேற்றும் பாடல்கள் யாத்துள்ளார்.

தில்லைக் கூத்தனை, வடலூருக்கு அழைத்து வரவேண்டும் பாடல் சுவைக்கத் தக்கதாம். தில்லையிலே எல்லையிலாப் பேரன்புடைய அடிகளாருக்கு, ஏன்ஞ அங்கு இறையுணர்வுக்கு இடமற்ற நிலையை உணர்ந்தார்போலும்! அதனல் வடலூருக்கே இறைவனைக் குடி மாற்றியழைக்கிருர் !

"இடுக்கில்லாமல் இருக்க இடமுண்டு நடஞ் செய்ய
இங்கம்பலம் ஒன்று; அங்கே எட்டம் பலம் உண்டு."

என்னும் பகுதி எண்ணத்தக்கது.

சமயச் சீர்திருத்தத்தைக் குமுகாயச் சீர்திருத்தத்தோடு விரும்பியவர் அடிகளார். 'இது நல்ல தருணம்' எனத் தொடங்கும் பாடலில்,

"மதித்த சமயமத வழக்கெல்லா மாய்ந்தது
வருணச் சிரமமெனு மயக்கமுஞ் சாய்ந்தது"

எனவும்,

"குறித்த வேதாகமக் கூச்சலும் அடங்கிற்று
குதித்த மனமுருட்டுக் குரங்கு மூடங்கிற்று"

எனவும் குழுகாயக் கொடுமைகளை ஆய்ந்து கண்டிப்பதை அறியலாம்.

போலி இறையன்பையும், போலித் துறவையும், உண்மைகள் உணராத போலி நடக்கைகளையும் அடிகளார் கடுமையாகச் சாடியவர். மக்கள் பால் இருக்கும் குறைகளைத் தம்பால் உள்ளது போலப் பல பாடல்களில் குறிக்கிறார். கழிவிரக்கத்தோடு பாடிய இத்தகு பாடல்கள் மக்கள் கறைபோக்கும் மருந்தாகும். 'மனுமுறை கண்டவாசகம்' இத் துறையில் குறிப்பிடத் தக்க பாட்டாகும்.

'குற்றாலக் குறவஞ்சி' யில் வரும் வெண்ணிலாக் கண்ணி மரபில் அடிகளாரும் சமயக் கருத்தமைத்துப் பாடி வென்றுள்ளார்.

முடிவுரை. நினைந்து நினைந்து உணர்ந்து உணர்ந்து நெகிழ்ந்து நெகிழ்ந்து அன்பே நிறைந்து நிறைந்து ஊற்றெழுங் கண்ணீரதனால் உடம்பு நனைந்து நனைந்து அருளமுதே யாகி விளங்கும் அருட்பாவின் இசைப்பாக்களாகிய சுவிநுகர் கனிகள் கருப்பங்கட்டியினுமினித் திடுவதாகும். சொல்லாலும் சுவையாலும் பொருளாலும் சிறந்த அப்பாக்களைப் படித்தால் வாயெலா நதித்திக்கும்; நினைப்பின் மனமெலா நதித்திக்கும்; உணர்ந்தால் உயிரெலாம், உணர்வெலா நதித்திக்கும்; மன்னிய அறிவெலா நதித் திக்குமெனில், அதில் வரும் இன்பம் என்னவென்று புகலுவேன் ?

சொல்லிசையளபெடை

திரு. அ. நட்சினமூர்த்தி, பி. ஏ. (ஆனர்சு) பி எட்.
திருப்புட்பம் கல்லூரி, பூண்டி.

தமிழிலக்கணத்தில் 'அளபெடை' தனித்ததோரிடம் வகிக்கின்றது. தொல்காப்பியர் நூன்மரபின்கண் குற்றெழுத்துக்கள் ஓரளபும், நெட்டெழுத்துக்கள் ஈரளபும் இசைக்கும் என்றும், இயல்பாகவே மூவளபு இசைக்கும் ஓரெழுத்து இல்லையென்றும், செய்யுட்கண் ஓசை வேண்டுமிடத்து எவ்வளவு நீட்ட வேண்டுமோ அவ்வளவு நீட்டிக் கொள்ளலாம் என்றும் விதி வகுத்து மொழி மரபில்,

"குன்றிசை மொழிவயின் நின்றிசை நிறைக்கும்
நெட்டெழுத் திம்பர் ஒத்தகுற் றெழுத்தே"

என்ற சூத்திரத்தால் அளபெடுப்பது நெட்டெழுத்தே என்றும், அளபெடுத்ததன் அறிகுறியாக, அளபெடுத்த நெடிலின் குறில் வடிவம் அதன் பின் நிற்கும் என்றும் இனக்குறிலில்லாத ஐ,ஔ என்னும் நெடில்கட்கு முறையே இகரமும் உகரமும் இசை நிறைவாகும் என்றும் கூறினர். ஆசிரியர் அளபெடையெனப் பொதுவாகக் கூறினரேனும் பிற்காலத்து உரையாசிரியர்கள் இசை நிறை, இன்னிசை, சொல்லிசை என மூவகைப் படுத்துக் கூறுவாராயினர். உரைவேந்தர் நச்சினார்க்கினியர் இவ்வேறுபாடு கண்டிலர்.

நன்னூற்காண்டிகையுரையாசிரியர், விருத்தியுரையாசிரியர், சங்கர நமச்சிவாயர் அனைவரும் இம்மூவகைப் பாகுபாட்டையும் காண்கின்றனர். செய்யுள் இலக்கணம் பிழையாது காக்க அளபெடுப்பது இசை நிறை அளபெடையென்பதும், இலக்கணம் பிழையாதேனும் செவிக்கு இனிய ஓசை தருதற் பொருட்டே அளபெடுப்பது இன்னிசை அளபெடை என்பதும், பெயர்ச் சொல்லை வினையெச்சப் பொருள் தருமாறு செய்ய அளபெடுத்துச் சொல்லிசை நிறைப்பது சொல்லிசை அளபெடை என்பதும் இப் பெருமக்களின் கருத்தாகும்.

முதற்கண் இப்பாகுபாட்டின் வன்மை மென்மைகளை ஆராய்வோம் தொல்காப்பியர் 'இசை நிறை' என்ற சொல்லை ஆள்கின்றார். "குன்றிசை மொழிவயின் நின்றிசை நிறைக்கும்" என்று கூறும்பொழுது அவர் ஓசை குறைந்த சொற்களில்

அவ்வோசைக் குறைவை நிறைவு செய்யும் என்னும் பொருளி லேயே கூறினர். "செய்யுளிலக்கணம் பிழையாமல் காத்தற்கு அளபெடுக்கும்" என்று அவர் கூறவில்லை. எனவே செவிக்கு இனிமை தருதற்கே அளபெடை வேண்டும் என்பதுதான் ஆசிரியர் கருத்தாம்.

"ஐ ஔ என்னும் ஆயீரெழுத்திற் கிகர உகரம் இசை நிறைவாகும்" என்னும் நூற்பாவிலும் ('இசை நிறைவு' என் னும் தொடர் ஓசை நிறைத்தல் என்ற பொருளிலேயே உள்ளது. ஆசிரியர் கருத்து இதுவே என்பதனைச், செய்யுளியல் 325-ஆம் நூற்பா வலியுறுத்துகிறது. "அளபெடை அசைநிலை ஆகலும் உரித்தே" என்ற நூற்பா "உயிரளபெடை அசையாக நிற் கவும் பெறும்" என்பது இதன் பொருள். "உம்மை எதிர் மறையாகலான் ஆகாமை பெரும்பான்மை" என்றார் இளம்பூர ணர். ஆகவே 'இசை நிறை' என்ற தொடர் செவிக்கினிமை சேர்த்தலையே காட்டுகிறது. பிற்காலச் சான்றோர்களோ அள பெடை அலகுபெற்று அசைநிலையாவதற்கு முதலிடம் கொடுத்து அதனையே இசை நிறை அளபெடையென்றும், செய்யுளிசை நிறை அளபெடையென்றும் கூறுவாராயினர்.

அடுத்து இன்னிசை அளபெடையென்ற பெயர்ப் பொருத் தத்தினை ஆராய்வோம். செய்யுள் இலக்கணம் பிழையாதேனும் இன்னிசை தருதற்காக வருவது இன்னிசை அளபெடையென் றும் குற்றுயிர் நெட்டுயிராகத் திரிந்து பின் அளபெடுப்பது அதன் இயல்பென்றும் காண்டிகையுரைகாரர் கூறுகின்றார்.

இளம்பூரணர் செய்யுளியல் 325-ஆம் நூற்பாவுரையில் அளபெடை அலகு பெறாது நிற்பதற்கு

"இடைநுடங்க ஈர்ங்கோதை பின்தாழ வாட்கண்
புடைபெயரப் போழ்வாய் திறந்த — கடைகடையின்
உப்போ ஒ எனவுரைத்து மீள்வாள் ஒளிமுறுவற்
கொப்போநீர் வேலி உலகு"

என்ற வெண்பாவைக் காட்டுகிறார். ஈண்டு உப்போ என நின்றால் மாமுன் நிரைவந்து இயற்சீர்வெண்டளை அமையும். உப்போ ஒ என நிற்பின் காய்முன் நிரை வந்து வெண்டளை பிழைக்கும். எனவே, அளபெடை அலகு பெறாது இன்னிசை தருவதற்காகவே நிற்கிறது. இதனை ஏன் இன்னிசையளபெடை எனக் கூறக் கூடாது?

"கெடுப்பதூஉம் கெட்டார்க்கு" என்பதில் அளபெடுத்தாலும் அளபெடுக்காவிட்டாலும் இலக்கணம் பிழையாது. இதுவும் இன்னேசைக்காக வந்ததுதான். உப்போஒ என்பதில் அலகிட்டால் பிழையாகிறது. இங்கே அலகிட்டால் பிழையாகும் இடத்திலேயும் அளபெடை வருவதால் இன்னேசை தருவதொன்றே பாடலாசிரியர் கருத்தாகிறது. இங்கே குறில் நெடிலாகி அளபெடுக்கவில்லை. எனவே இன்னிசை யளபெடைக்குரிய இலக்கணமாக இவ்வாசிரியர் தந்த விளக்கம் பொருந்தாமற்போவது தெளிவு. ஆகவே ஆசிரியர் தொல்காப்பியனுர் அலகுபெறும் அளபெடை, அலகு பெருத அளபெடை இரண்டினது வேலையும் இசை நிறைத்தல் என்றே பொதுவாகக் கொண்டார்.

இனிச் சொல்லிசை அளபெடையைக் காண்போம். இதனைப் பற்றித் தொல்காப்பியர் எண்ணிப் பார்க்கவேயில்லை. பெயர்ச்சொல் வினையெச்சத்தின் பொருளைத் தருவதற்காக அளபெடுப்பது சொலலிசையளபெடையென்பது பிற்கால ஆசரியர்களின் கருத்தாகும். பெயர்ச்சொல்லின் இறுதியிலுள்ள நெட்டெழுத்து அளபெடுப்பதனுல் அச்சொல் வினையெச்சப் பொருளைத் தருகிறது என்பது இவர்தம் கொள்கை. இப்படியொரு நிலை தமிழில் இருப்பது உண்மையெனில் எச்சவியலில் "செய்து செய்யூ" என்னும் சூத்திரத்தில் பலவகை வினையெச்ச வாய்பாடுகளைக் கூறும் ஆசிரியர் கூருது விடார். நபு என்னும் ஒரு சொல்லுக்கு ஒரு சூத்திரமும், உசு, முசு என்ற இரு சொற்களுக்கு ஒரு சூத்திரமும் விதிகள் வகுக்கின்ருர். இவைபோல் மிக நுணுக்கமாக அமைந்த இலக்கணங்களையும், மிக அருமையாக ஓரோவிடத்தில் வரும் முடிபுகளையும் கூட எண்ணிப் பார்த்து நூல் செய்தவர் இப்படியொரு நிலையுண்டெனில் கூருது விட்டிருப்பாரா என எண்ணிடல் வேண்டும். அவர் கூற வில்லையெனவே அப்படியொரு நிலை இல்லை என்றே தெளிதல் வேண்டும்.

சொல்லிசையளபெடைக்கு உரனசைஇ வரனசைஇ கெழீஇயிலர் என்னும் திருக்குறட் சொற்களை எடுத்துக் காட்டுகின்றனர். இவர்கள் கருத்துப்படி நசைஇ என்பதில் ஐகாரமும் (குறள் 1194) கெழீஇயிலர் என்பதில் 'ஈ' காரமும் அளபெடுத்தன. இவர்கள் நோக்கில் நசை, கெழு என்பன பெயர்ச் சொற்கள். மேலும் ஐகார ஈற்றுப் பெயர்ச் சொல்லும், முற்றுகர ஈருக இருந்து பின் ஈகார ஈருகத் திரிந்த சொல்லுமே இவ்வாறு அளபெழுந்து வினையெச்சப் பொருள் தரும் என்பதும் இவர்

கள் கருத்தாகிறது. இரண்டிலும் இறுதியில் தனியே நிற்பது இகர உயிரே. ஏனைய நெடிலீறுகள் அளபெடுத்து வினையெச்சப் பொருள் தருவதற்கு அவர்கள் சான்றுகள் தந்திலர். எனவே இம்முடிவு பெரிதும் ஐயத்திற்கும் ஆராய்ச்சிக்கும் உரியதாகின்றது.

மேற்காட்டிய இரு சொற்களிலும் இறுதியில் தனியே நிற்கும் இகர உயிர் ஐகார ஈறும், ஈகார ஈறும் அளபெடுத்ததன் அறிகுறியா என்ற வினாவுக்கு முதலில் விடை காண வேண்டும். தமிழில் 'இ' கர விகுதி வினையெச்சப்பொருண்மையும் இறந்த காலப் பொருண்மையும் கொண்டது ஏவல் வினைமுதல்களோடு கூடி அவற்றை வினையெச்ச மாக்குவது அதன் செயல் (ஆடு + இ > ஆடி. கூடு + இ > கூடி.) எனவே நசைஇ கெழீஇயில் எனும் சொற்களில் நிற்கும் 'இ' கர உயிரும் வினையெச்ச விகுதியாகலாமோ என்ற ஐயம் ஏற்படுகிறது. இவ்விரு சொற்களன்றியும் சங்க இலக்கியங்களில் ஐகார ஈற்றுக் குறிலிணை ஓரசை வினைச் சொற்கள், முற்றுகர ஈற்று ஓரசை ஏவல் வினைச் சொற்களாக விருந்து ஈகார ஈற்றுச் சொற்களாகத் திரிந்த சொற்கள் ஆகியவைகளும் அளைஇ, வளைஇ. தழீஇ. கெழீஇ என்றவாறு இகர உயிரை இறுதியில் கொண்டு வினையெச்சங்களாகவே ஆளப்படுகின்றன. இத்தகைய சொற்கள் ஈறுதிரிந்த வினையெச்சங்களே என்பதனை ஈவ்வாசிரியர்கள் ஒப்புக்கொண்டுள்ளனர். அவ்வாறெனின் இச் சொற்களில் இறுதியில் நிற்கும் இகர உயிர் வினையெச்ச விகுதியேயென்பதும், ஆனால் உகரத்தின் திரிபே இகரம் என்பதும் இவர்கட்கு உடன்பாடாகும். சேனாவரையரும் வினையியலில் "செய்து செய்யூ" என்னும் நூற்பாவுரையில் 'இ' விகுதியும் "ய்" விகுதியும் தனி இடைச் சொற்கள் அல்லவென்றும் உகரத்தின் திரிபுகளே என்றும் கூறி உரைஇ. சினைஇ இரீஇ. உடீஇ என்பன செய்யுண் முடிபுகள் என்று விளக்கம் தருகிறார். எனவே இந்த 'இகரம்' வினையெச்சவிகுதியே என்றும் ஆனால் உகரத்தின் திரிந்த வடிவமே என்றும் அவர் கொண்டது புலப்படும். இக்கருத்தினை யொட்டியே பிற்காலத்து ஆசிரியரும் இவற்றை ஈறுதிரிந்த வினையெச்சங்கள் என்றனர். இச்சொற்களின் முதனிலைகள் யாவும் ஏவல் வினைமுற்றுக்களே என்பதில் இவர்கட்குக் கருத்து வேறுபாடு இல்லை என்பது தெளிவு.

இங்கு 'இகரம்' வினையெச்ச விகுதியென்று கொண்ட இச் சான்றோர் நசைஇ, கெழீஇயலர் என்பவற்றில் மட்டும் அள

பெடுத்ததன் அறிகுறியென்று கூற்றி வளைத்து இலக்கணம் கூறுவானேன் என்ற வினு எழுகின்றது. இதற்குக் காரணம் நசை என்பதனை ஐகார ஈற்றுப் பெயர்ச் சொல்லாகவும் கெழீஇ என்பதில் இகரம் நீங்கிய பகுதி கெழு என்ற பெயர்ச் சொல்லின் ஈறுதிரிந்த வடிவமாகவும் கொண்டதேயாகும். கெழிஇயிலர் என்ற சொல் கெழீ + இலர் என்னும் இரு சொற்கூட்டு. இந்தக் கெழு என்னும் சொல்லிற்குப் பரிமேலழகர் "நல்வினை" என்று பொருள் கொண்டு நல்லூழ் இல்லாதவர் என்று விளக்கம் கூறியதனை அவ்வாறே இவர்கள் ஏற்றுக்கொண்டு அச்சொல் கெழீ என ஈறுதிரிந்து அளபெடுத்துக் கெழிஇ என நின்று பின் இலர் என்பதனோடு இணைந்து கெழீஇயிலர் என்று ஆயிற்று என்று கருதிவிட்டனர். கெழு என்ற சொல் நல்வினை என்ற பொருளுடைய பெயர்ச் சொல்லாகத் திருவள்ளுவர் கருதி யிருப்பின் கெழூஉவிலர் என்றே அளபெடுக்கச் செய்திருப்பார். அவ்வாறின்றிச் கெழீஇயிலர் என்று சொன்னதால் ஒத்த அன்புரிமை யுடன் பழகியிருந்திலர் என்ற பொருளிலேயே கூறியுள்ளார். பயிலியது கெழீஇய என்னும் சான்றோர் ஆட்சியைக் காண்க. எனவே கெழு + இ > கெழீஇ + இலர் என்று பிரிக்கப்படும் கெழீஇ பொருந்தி என்ற வினையெச்சப் பொருள் படுதலைக் காண்க. தவிரவும் கெழு என்ற சொல் நல்வினையென்ற பொருளில் யாண் டும் வந்ததாகத் தெரியவில்லை. எனவே கெழு என்பது ஏவல் வினைச்சொல்லே. கெழீஇ என்பது இகர விகுதியேற்ற வினை யெச்சமே. எனவே இதிலுள்ள இகரம் அளபெடையின் அறி குறியாகாது என்பது தெளிவு.

இனி, நசைஇ என்பதனை நோக்குவோம் இதனையும் மேற் சொன்ன சான்றோர்கள் வினையெச்சச் சொற்களாக ஒத்துக் கொண்ட அளைஇ, முளைஇ, அணைஇ, விரைஇ என்ற சொற் களோடு சேர்த்தே எண்ணுதல் தகும். அளை, முளை, அணை என்பன ஏவல் வினைச் சொற்களாதல் போன்றே நசை என்னும் சொல்லும் ஏவல் வினைச்சொல்லே. ஆனல் முதனிலை தொழிற் பெயர் போன்று வினையாயும் பெயராயும் நிற்பது எனலாம். (நசையின் வரலாறு பக்கம் 144)

ஐகார ஈற்று முதனிலைகளாகப் (ஓரசைச் சொற்கள்) பண்டு இலக்கியங்களில் ஆளப்படுவனவற்றைச் சிலவகைகளாகப் பிரிக் கலாம். (1) இயல்பாகவே 'ஐ'கார ஈற்றைப் பெற்ற குறி லிணை ஓரசை ஏவல் வினைச்சொற்கள்: எ—டு அளை, அணை, தலை இவை அளைஇ அணைஇ, தலைஇ என எச்சமாக வழங் கப்படும். (2) குற்றுகர ஈற்றுக் குறிலிணை ஓரசைச் சொற்

களாக இருந்து பின் ஐகார ஈற்றுச் சொற்களாகத் திரிந்தவை. எ—கு— மறு > மறை ; உறு > உறை ; வகு > வகை ; பகு > பகை ; நகு > நகை ; தொகு > தொகை. தடு > தடை : உறைஇ, தொகைஇ, வகைஇ என எச்ச வடிவமாக ஆளப் படுகின்றன ; (3) அகர ஈறும், இகர ஈறும் கொண்ட குறிலிணை ஏவல்களாக இருந்து பின் ஐகார ஈறுனவை.

முனி > முனை > முனைஇ, கட > கடை > கடைஇ
வர > விரை > விரைஇ ; சின > சினை > சினைஇ.

மேற்சொன்ன மூன்று வகைச் சொற்களில் முதல் வகையும். மூன்றும் வகையும் ஏவல் வினைச் சொற்களாகவே நின்று இகரம் இணைந்து வினையெச்சமாகவும் அதன்பின் அகரம் இணைந்து அளைஇய முளைஇய என்றவாறு பெயரெச்சமாயும் அமைகின்றன. இரண்டாவது வகைச் சொற்கள் முதனிலைத் தொழிற்பெயர் போல வினைச்சொல்லாகவும் பெயர்ச் சொல்லாகவும் அமைகின்றன. வள்ளுறை சிதறி ; எனை வகையால் தேறியக் கண்ணும் : பல்லார் பகை கொளினும், இன்னகை மகளிர் ; ஏனைச் சொற்கள் வெளிப்படை. உறை இ—வகைஇ, தொகைஇ, தடைஇ என்று வரும்பொழுது இவை வினைகளாகின்றன. இவ்வாறு அமையும் சொற்கள் பெரும்பாலும் கு, சு. து. பு டு, று என்னும் ஈற்று முன்னிலை ஏவல் ஓரசைச் சொற்களே. சுகரத்தில் முடியும் ஓரசைச் சொற்கள் இரண்டே தமிழில் உண்டு : உசு — உளு ; முசு — குரங்கு — 'பு' கரத்தில் முடியும் ஒரே ஏவல் தான் உண்டு. அது 'தபு' என்பது ; அதுபோல் 'து' கர ஈற்றில் அமைந்த குறிலிணை ஓரசைச் சொல் கது வென்ற ஒன்றே. எனவே கு. டு. று. என்ற மூன்று ஈற்றிலும் அமைந்த குறிலிணை ஏவற் சொற்களே ஐகார ஈற்றுடன் பெயராகவும் வினையாகவும் அமைகின்றன. குறிலிணை முற்றுகர ஈற்றின அல்லவேனும் சில ஈரசைக் குற்றிய லுகர ஈற்றிலும் சில சொற்கள் ஐகார ஈறுகத் திரிவது இயல்பாக இருந்திருப்பதாகத் தெரிகிறது. வித்து என்னும் சொல் வித்தட்டுண்டனை என்று பெயராகவும் வயங்குமொழி வித்தி என வினையாகவும் அமைகிறது.

இதுவே விதை என்று திரிந்து பெயராகவும் வினையாகவும் அமைவதைக் காணலாம். 'சு' கரத்தில் முடியும் நச்சு என்ற குற்றுகர ஈற்றுச் சொல்லும் "நச்சியிருந்த நசை பழுதாக" என வினையாகவும், "நச்சுக் கொன்றேற்கும்" நன்னெறியுண்டோ,' எனப் பெயராகவும் அமைகிறது. இதுவே வித்து > விதை என்று ஆயது போன்று நச்சு > நசை என்று திரிந்திருக்க

இடமுண்டுபோல் தோன்றுகிறது. இச்சொல்லும் பெயராகவும் வினையாகவும் அமைகிறது எனலாம். நசை பழுதாக என்பதில் பெயராகவும் நசைஇ என்பதில் வினையாகவும் அமைவதாகக் கொள்ளலாம் எனவே நசைஇ என்பதில் நசை என்ற பெயர்ச் சொல் அளபெடுத்து வினையெச்சப் பொருள் தந்தது என்று கொள்ளத் தேவையே இல்லை.

விதை என்பது வினையாக நின்று விதைத்து — விதைத்த என எச்சங்களாக அமைவதுபோல, நசை என்பது வினையாக நின்று நசைத்து — நசைத்த என எச்சமாக வழங்கவில்லையே என்று வினவலாம் மேற்சொன்னவாறு ஐகார ஈருகத் திரிந்து வினையாகவும் பெயராகவும் அமைந்த சொற்கள் அனைத்தும் திரிந்த நிலையிலேயே எச்ச வடிவு பெறவில்லை அவை எச்சமாகும் பொழுது மீண்டும் பழைய முற்றுகர ஈருகவே நின்று விடுதலும் காணப்படுகிறது. எ — டு.

(1) வகு — வகை — வகுத்து, வகுத்த
தொகு — தொகை தொகுத்து, தொகுத்த
தொக்கு, தொக்க

(2) நகு — நகை — நகைத்து — நக்கு
பகு — பகை — பகைத்து — பகுத்து
மறு — மறை — மறைத்து — மறுத்து

இரண்டாம் வகையில் பகைத்து — பகுத்து என்பதிலும் சிறிது பொருள் வேறுபாடும் அமைவது காணப்படுகிறது முதல் வகையில் எச்சமாகும் பொழுது மீண்டும் பழைய வடிவமே முதனிலையாய் அமைவதைப் புறனடையாகக் கொள்ளலாம். நச்சு — நசை — நச்சி என்பதனை இதனோடு ஒப்பக் கொள்ளலாம். எனவே நசைத்து என அமையவில்லை என்று கருதத் தேவையில்லை. எனவே நசைஇ என்பதில் நசை என்ற சொல் வினை நிலையிலிருந்தே ஏனைய அளைஇ வளைஇ என்ற சொற்களைப் போலவே வினையெச்சமாயிற்று என்றே கொள்ள இடமுண்டு.

இனி நசைஇ என்பதில் 'இகரம்' ஐகார ஈறு அளபெடுத்ததைக் குறிக்கும் அடையாளமே என்பது இவ்வாசிரியர்களின் கொள்கை இது வினையெச்ச வடிவம் அன்று என்பதும் வினையெச்சப் பொருளை ஒருவாற்ருன் தரும் அளபெடையே என்பதும் இவர்கள் கருத்து. எனவே வினையெச்சக் கூறு இதில் அறவே

இல்லை என்பதாகிறது. இகர விகுதி வினையெச்சப் பொருண்மையும், இறந்த காலப் பொருண்மையும் உள்ளடக்கியது என்பது இவர்கட்கு உடன்பாடே என்பது முன்னர்க் காட்டப்பட்டது. நசைஇ என்பது நசைஇய என்றும் பல இடங்களில் ஆளப்படுகிறது நசைஇ + அ > நசைஇய: இது பெயரெச்ச வடிவமாகும் — வினையெச்சம் + பெயரெச்ச விகுதி > பெயரெச்சம் —▷ தேடி + அ > தேடிய என்பது தமிழ் மரபு. எனவே வினையெச்ச வடிவமாகிய நசைஇ என்பதனோடு 'அ' கர விகுதி சேர்ந்த வடிவமே நசைஇய என்பதாயிற்று என்பது விளங்கும் எனவே, நசைஇ என்பது வினையெச்சப் பொருள் தரும் அளபெடை என்பதனைக் காட்டிலும் வினையெச்சத்தில் உண்மையான — இயற்கையான வடிவமே என்பது உறுதியாகிறது. இது அளைஇய, தரீஇய, வளைஇய என்ற பிற சொற்களைப் போன்றதாகவே காணப்படுகிறது.

இனி, தற்காலத்தவர்கள் தழீஇ, அளைஇ, வெரீஇ என இகரத்தை இறுதியாகப் பெற்ற அனைத்தையுமே சொல்லிசை அளபெடையெனக் கூறி வருகின்றனர். ஆனால் உரையாசிரியர்கள் கருத்துக்கும் இது முரண்பாடாக அமைவதனைக் காணலாம். இதனை ஆய்வதும் நலம் பயக்கும்.

அளைஇ, உரைஇ, உரீஇ, முனைஇ என்னும் சொற்கள் ஈறுதிரிந்த வினையெச்சங்கள் என்பதும் இவை செய்யுள் முடிபுகள் என்பதும் முன்னர்ச் சொல்லப்பட்டன. அளபெடையென்பது உயிரீற்றுச் சொற்களுக்கே பொருந்தும். இலக்கியங்களில் செல் உண் என்னும் மெய்யீற்றுச் சொற்கள் இயர் என்னும் வினையெச்ச, வியங்கோள் வினைமுற்று விகுதியோடு சேரும்பொழுது செலீஇயர் உணீஇயர் என்று மாறுகின்றன. இவற்றில் உள்ள மெய்யெழுத்துக்கள் ஈகார ஈறுகளாகத் திரிந்ததற்குப் பின்வரும் இகர உயிரின் செல்வாக்கே காரணமாகும், எனவே பின்வரும் உயிரின் ஆற்றலால் ஏற்பட்ட ஒலித்திரியே இது. இகரம் வந்ததால முன்னுள்ள எழுத்துத் திரிந்ததேயன்றி முன்னுள்ள நெடில் அளபெடுத்ததை சூறிக்கும் அறிகுறியன்று. அதிலுள்ள இகரம் இயர் என்ற விகுதியில் இயற்கையாக அமைந்த எழுத்தே என்பது தெளிவு பணி + இயர் —> பணீஇயர்; செகு + இய —> செகீஇய தழு + இய—> தழீஇய முனி + இய—> முனீஇய என்னும் சொற்களில் இகரமும், உகரமும் ஈகாரமாகத் திரிவதும் பின்வரும் இகரத்

(152 ஆம் பக்கம் பார்க்க)

வாழ்விக்கும் காப்பியம்

திரு. K. சோமசுந்தரம், பி. ஏ. பி. எல்., தஞ்சை.

(சென்ற இதழின் தொடர்ச்சி)

பௌத்த சமயம் எதனையும் ஆழ்ந்த ஆராய்ச்சியும், ஆராய்ச்சியுடன் கூடிய முயற்சியும், சோதனையுமின்றி உடன்படுவதில்லை. பிறவி, பேதைமை காரணமாக வருவதென்பதும், உயிர் உடலைத் தாங்கிய வழி. அவ்வுயிருக்குச் செய்கை முகிழ்க்கிறதென்றும், அச்செய்கை ஐவகைச் சீலத் தமைதியில் நிகழின் பிறவியொழியுமென்றும், அல்லாக்கால் பிறவி பெருக நேருமென்பதும் பௌத்தத்தின் துணிபாகும் பிறவி காரணக் காரிய தொடர்ச்சியாய்க் கரையின்றி வருதலின். அதனை மரபு பற்றி சாத்தனார் 'பிறவி யென்னும் பெருங் கடல்' என்றார். பெருகும் பிறவியை யொழிக்க, பேதைமை செய்கை உணர்வு அருவுரு, வாயில், ஊறு, நுகர்வு, வேட்கை, பற்று, பவம், தோற்றம் வினைப் பயன் ஆகியவற்றை அறவே நீக்குதலை அறியவேண்டும்.

'பேதமை செய்கை வுணர்வே அருவுரு
வாயிலூறே நுகர்வே வேட்கை
பற்றே பவமே தோற்றம் வினைப்பயன்
இற்றென வகுத்த இயல்பீராறும்
பிறந் தோரறியிற் பெரும்பே றறிகுவர்
அறியார் ஆயின் ஆழ்நரகறிகுவர்.'

என்பது அறிவான்ற முயற்சியான் தேறிய பௌத்த நன்முடிபு.

பேதைமை முதலிய பன்னிரண்டும் தொடர்ந்து இயங்குங்கால், தமக்குள், முன்னுள்ள யாவற்றினின்றும் பின்னுள்ளவையாவும் தோன்றித் தொழிற்படும். பேதைமையாவது மயங்கிக் கண்டதும் மறந்துக் கேட்டதும் தெளிதலென்க.

'பேதைமை யென்பதியாதெனவினவி
னோதிய விவற்றை யுணராது மயங்கி
யியற்படு பொருளாற் கண்டது மறந்து
முயற்கோ டுண்டெனக் கேட்டது தெளிதல்.'

ஓதியவற்றை உணராது கூறப்பட்ட இயல்பு முறைகளை அறிகொல்லலால் மயங்கி, இயற்கையாகத் தோன்றும் பொருள்களால் கண்டதைமறந்து முயற்கோடுண்டெனக் கேட்டதனைத் தெளிதலே பேதைமையாகும். காரண காரியமாய்த் தொடர்ந்து

பெருகும் கருமப் பிறவிக்கு வித்து பேதைமை. பேதைமை யிலிருந்து செய்கையும். செய்கையிலிருந்து உணர்வும் உணர் விலிருந்து அருவுருவும் இவ்வண்ணமே பிறவும் தோன்றி இடையீடின்றி இயங்கி வளர்ந்து கரை காணுப் பெருங் கடலெனப் பெருகிக் கொண்டே போகும். இவற்றினில் முன்னுள்ள வற்றை முறையே அறிவுடைமையால் நீக்கிவிடின், பின்னுள்ள வைத்தாமே அகன்றொழியும். இத்தகைய வழியில்லாது வேறெவ் வகையிலும் இவற்றை ஒழித்தல் ஒல்லாதென்பதைக் கடைப் பிடிப்பது பௌத்தம் என்க

மறுபிறவியும் இருவினைப் பயனும், ஊழ்வினை உருத்து வதும், புத்த சமயம் கைக்கொண்ட கொள்கைகளாகும். செய் வினை வழித்தாய் உயிர் உடலினை யெய்தும் என்பது

'ஐயம் உண்டோ ஆருயிர் போனல்
செய்வினை மருங்கிற் சென்றுபிறப் பெய்தல்?'

என்ற அடிகளான் பெறப்படும் மருளுடைய மாக்களது மன மாசு கழூஉம் பிரமதருமன் என்ற முனிபுங்கவரை உண்பித்தற் பொருட்டு, பழம் பிறப்பில, மணிமேகலையாகிய இலக்குமியும், உதயகுமாரனுமாகிய இராகுலனும், சமையல் செய்வானை நிய மனம் செய்ய, அவன் காலம் தாழ்த்தி வந்த அவசர அமயத் தில் நல்லடி தளர்ந்துக் கீழ்வீழ்ந்து மடைக்கலத்தைச் சிதைத்து விட, வீழ்ந்த மடையனை, இராகுலன் வெகுளிதோன்ற, தோளும் தலையுந் துணிந்து வேருக வெட்டி வீழ்த்தினன். முன் செய்த அத்தீவினையே நிழல் போன்று தொடர்ந்துவர உதய குமாரன் காஞ்சனனுல் வெட்டுண்டான். இதனைச் சாத்தனர்.

'மடைக்கலஞ் சிதைய வீழ்ந்த மடையனை
யுடற்றுணி செய்தாங் குருத்தெழும் வல்வினை
நஞ்சுவிழியாவி னல்லுயிர் வாங்கி
விஞ்சையன் வாளால் வீட்டியதன்றே
யாங்கறிந் தனையோ வீங்கிது நீயெனிற்
பூங்கொடி நல்லாய் புகுந்த திதுவென
மொய்ம்மலர்ப் பூம்பொழில் புக்கது முதலாத்
தெய்வக் கட்டுரை தெளிந்ததையீரு
வுற்றதை யெல்லா மொழிவின் றுரைத்து

எனக் கூறியதினுன் அறியப்படும். மற்றும் முன்னைப் பிறவியில் சிங்கபுரத்தில் கோவலன், சங்கமனன் எனும் வணிகனை. பகை மன்னனது ஒற்றனெனப் பழி சுமத்திக் கொலை செய்த தீவி

னையே, பொற்கொல்லனால் வெட்டப்பட்டதற்குரிய காரணமென, மெய்வகை யுணர்ந்த விழுத்தவ முதல்வராய சாத்தனார். வஞ்சி மாநகர் புக்க காதையில் (வரிகள் 13-33) தெளிவுற நிறீஇயி னர். இதனையே மதுரை மாநகர்த் தெய்வம் கண்ணகிக்குக் கூறியதாக இளங்கோவடிகள் தன் சிலப்பதிசாரக் கட்டுரைக் காதையில் மொழிந்துள்ளதும் விளங்க வுணரப்படும்.

இருவகைப் பற்றற்று சிறந்தது பழகும் தெளிவுடைய சாத்தனார், நல்வினை, தீவினை ஆகிய இருவினைகளைப் பற்றிக் கூறியுள்ளது இவண் உணரற்பாற்று. தீவினை உடலின்கண் தோன்றுவதும். சொல்லிற்றோன்றுவதும், உள்ளத்தில் தோன் றுவது மெனமூவகைப் படுத்தி பின்வருமாறு கூறப்பட்டது காண்க.

(149 ஆம் பக்கம் தொடர்ச்சி)

தின் ஆற்றலால் ஏற்பட்ட ஒலித்திரிபேயாகும். இயர், இய, இ என்னும் விகுதிகளை முதனிலையோடு இணைத்துச் சொல் லாமல் தனியாகவே இடுவது அக்காலத்துச் செய்யுள் முடி பாக இருந்துள்ளது குரீஇ, பரீஇ என்னும் இயல்பான சொற்களும் பண்டு வழங்கி வந்துள்ளமையை ஒப்பு நோக்குக. உகர ஈறும். இகர ஈறும் மெய்யீறுகளும் திரிபடைந்தது போலவே சில அகர ஈற்றுச் சொற்களும் திரிந்துள்ள. சின > சினைஇ. விர > விரைஇ. கட > கடைஇ என்பனவற் றைக் காண்க. எனவே இவற்றிலுள்ள இகரம் வினையெச்ச விகுதியே என்பதும் அளபெடையின் அடையாளம் அன்று என்பதும் பெறப்படும்.

தைஇத் திங்கள் தண்கயப்படியும், (நற்றிணை) பைஇப்பைய (நற்) என்பனவும் செறிதொடீஇ, பொலன் தொடீஇ (திணை மொழி ஐம்பது) என்பனவுமே அளபெடைகள். இங்கே பொருள் மாற்றம் ஏதும் இல்லை.

மேற்காட்டிய சான்றுகளால் இன்னிசையளபெடை, இசை நிறையளபெடை, சொல்லிசையளபெடை என்ற பாகுபாட்டின் பொருத்தமின்மை புலப்படும். இகரம் வினையெச்ச விகுதி யாகவே மேற்காட்டிய சொற்களில் நிற்பதும் விளங்கும். முத னிலையில் ஏற்படும் திரிபு இவ்விகுதியால் ஏற்படும் திரிபே என்பதும் விளங்கும். இவை மேலும் ஆயத்தக்கனவாகும்

தீவினையென்பதி யாதென வினவின்
ஆய்தொடி நல்லா யாங்கது கேளாய்
கொலையே களவே காமத் தீவிழைவு
உலையா வுடம்பிற்றோன்றுவ மூன்றும்,
பொய்யே குறளை கடுஞ்சொல் பயனில்
சொல்லெனச் சொல்லிற்றோன்றுவ நான்கும்
வெஃகல் வெகுளல் பொல்லாக் காட்சியென்று
உள்ளந்தன்னினுருப்பன மூன்றுமெனப்
பத்துவகையாற் பயன்றெரி புலவர்
இத்திறம் படரார் படர்குவராயின்
விலங்கும் பேயு நரகரு மாகிக்
கலங்கிய வுள்ளக் கவலையிற் றோன்றுவர்.'

இப்பிறவியில் ஒருவர் செல்வம் நிறையப் பெற்று விளங்குதல் சென்ற பிறவியில் அவர் செய்த நல்வினைப் பயனெனவும், நல்வினையாவது, முற்கூறியவற்றினின்றும் நீங்கி, நற்சீலம், நோன்பு, செறிவு, அறிவு முதலியவற்றினைக் கொண்டு அறமியற்றி நல்வினைப் பயன்களை நுகர்வரென்பர், ஆசிரியர் சாத்தனார்.

'நல்வினை யென்பதி யாதென வினவிற்
சொல்லிய பத்தின் றொகுதியி னீங்கிச்
சீலந்தாங்கித் தானம் தலைநின்று
மேலென வகுத்த வொருமூன்று திறத்துத்
தேவரு மாக்களும் பிரமருமாகி
மேவிய மகிழ்ச்சி வினைப்பய னுண்குவர்'

பௌத்தமதம் பொதுவாகக் கடவுள் ஒருவர் உளர் எனுங் கொள்கையினை வெளிப்படையாக வுடையதல்ல என்பது சிலர் கண்ட முடிபு ஆனால் அது கடவுளைப் பற்றிய உறுதியாவது ஆன்மாவைப் பற்றிய உறுதியாவது யாதுங் கூறி விளக்கவில்லையாயினும், அது கடவுளைப் பற்றிய எண்ண வளர்ச்சக்கு நிரம்பிய இடம் தந்துளது. அறிவிற்கப்பாற் பட்டதை அனுபூதியினாலே கண்டுணர்ந்து மகிழப்படுதலை அறிவினால் அறிய முயல்வது முயற் கொம்பாகும் என்பது புத்தரது கருத்து போலும். 'கண்டார் விண்டிலர்; விண்டார் கண்டிலர்' என்பது தமிழகத்தில் ஒரு மூதுரையாகத் தொன்று தொட்டு வழங்கி வருவதூஉம் ஈண்டுத் துணியப்படும் இவைகளைப் பற்றிப் புத்தர் துணிந்து சொல்லாதும், கூறியிட்டு மொழிதலுமில்லாதும், வினாவின் விடுத்தலுமில்லாதும், வாளாமை கொண்டிருந்தன

ராதலின், அவர் கடவுள் கருத்துடையரென்பதை மோன நிலையிலிருந்து தன் உடன்பாட்டினைத் தெரிவிக்கிறாரென்று கருதற்கும் இடமுளது. மனவாக்குகட்கு எட்டாத உண்மைப் பொருளைப் புத்தர் கண்டுணர்ந்து மோனமே அதற்குரிய விரிவுரையென அனுபூதி நிலையில் வழங்க வைத்தது அனுபவத்தால் உணரத்தக்கதென்பது இனிது விளங்கா நிற்குமென்க; இறைப் பற்றிய வினாவினை எழுப்புவது எளிது: ஆனால் அதற்குரிய தக்க விடை காண்பது அரிது.

மணிமேகலா தெய்வம் கடலின்கண் செல்வார்க்கு ஏற்படும் துன்பங்களையும், விபத்துக்களையும் போக்கிடும் அருட்டொழிலுடைய பௌத்த சமயத் தெய்வமென்பது மணிமேகலைக் காப்பியம் கூறா நிற்பது சற்று நினைவு கூரற்பாலது. மற்றும், புத்த தரும பீடிகையைப் பாதுகாக்கும். காவல் தெய்வமாகிய தீபதிலகையின் துணையால், மணிமேகலை, கோமுகிப் பொய்கையினைச் சார்ந்து, அதனின்று அமுத சுரபியைப் பெற்றுக் கொண்டாளெனச் சாத்தனார் சாற்றியுள்ளதும் கவனத்திற்குரியது. எல்லையற்ற அருளாளர், தன்னைக் காதலித்து வழிபடுவோர்க்கு, எழிலரும்பும் விரும்பிய தொருவடிவில் வெளிப்பட்டு, அருள் செய்யும் நிலையை, புத்த மதத்தினர் உணர்ந்து, அதனைத் தெய்வமென்று அழைப்பது உறுதியாயிற்று. தெய்வமென்பதோர் சித்தம், இதனான் புத்தமதக் கோட்பாடுடையார்க்கு உடன்பாடென்பது முணர்க. மற்றும், பௌத்தம், இயற்கையெனும் ஒன்றைப் பெரும்பாலும் உடன்பட்டு நிற்பதினான், இயற்கையென அழைக்கப்படும் பெரும் பொருள், கடவுட் கொள்கையுடையாரால் தெய்வமாகக் காணப்படுகின்றதும் ஈண்டு சற்றே நினைவுக்கு கொண்டுணரற்பாலது. எனவே, புத்தர் நல்ல ஒழுக்கத்து இறைமைப் பண்பினையும் உண்மையினையும், மக்கள் யாவரும் பற்றுக் கோடாகக் கொண்டு இன்புற்றொழுகுவதற்கேற்ற விழுப்பம் மேவிய சமயத்தை நிலை நிறுத்தியுள்ளாரென்பது வெள்ளிடைமலை. பொன்றாச் சிறப்பு கொண்டு, பௌத்த சமயம், எச்சமயத்திலும் கலந்து நிலவும் பாங்கினையுடையதாய், வயங்கியதாதலின், அதனை நிலைநாட்ட மணிமேகலை காப்பியம் எழுந்தது எனல் மறுக்கொணாதது, தெய்வப் பண்பினையுணர்த்தும் விழுத்தகை நல்லாராய சாத்தனார், பௌத்த மின்னற்றெய்வக் காட்சியின் சிறப்பினை நன்கறிந்து அதனைப் பற்றிய நினைவு வளர்ச்சிக்கு, ஏற்ற கருத்தினை, வாழ்விக்கும் காவியத்தில் படைத்து விளக்கும்போது, அதனில்

படிகின்ற நாம் தெய்வம் ஆளும் பேரின்ப வெளியில் திரிகின்ற வுணர்வை எளிதில் பெற்று விடுகிறோமென்பது மட்டும் உறுதியாய் விளங்கும்

அகாரணனாகிய கடவுளைப் பற்றி (the first cause that is uncaused by any other cause) புத்தர் யாதும் நேரிடையாய் இயம்பாதிருந்ததினன் சாத்தனாரும். தம் நூலின் கண்ணும் வெளிப்படையாகக் கடவுள் வணக்கம் கூறினாரில்லை. நிலையாமைக் குறிப்பு முதலாய தவஞானப் பகுதியினைக் கிளக்கும் இக் காப்பிய மெய்ந்நூல். காணுத் துணிபைக். கண்ட ஒழுக்கத்து இயல்புத்துணிபால் நிறுவி, தெய்வச் சிறப்பின் பெற்றியினைப் பற்றி தேற்றித் தெளித்துக் கூறுதலின் சாத்தனார் தம் நோக்கம் தெய்வத் தன்மையினையும், தெய்வ அருநிகழ்ச்சிகளையும் காவியத்தின்கண் யாண்டும் விளங்கச் செய்து விழுமியது பயத்தலென்பது பெறப்படும் ஆனல் மணிமேகலை ஆசிரியர், குறள் மணம் வீசும் தமது நூலை, சிலப்பதிகாரத்தின் தொடர்ச்சிக் காவியமெனக் கொண்டு, இளங்கோ, எல்லாம்வல்ல கடவுட்டன்மையுடைய திங்கள், ஞாயிறு, மழை ஆகியவற்றை வாழ்த்தித் தம் காவியத்தைந் தொடங்கினதினனே, தானும் தனியாகக் கடவுள் வாழ்த்துக் கூருது, உலகயியற்கையிலும், உயிரியற்கையிலும். வாழ்க்கையிலும் தெய்வப் பெற்றிகலந்து மிளிரும் வகையினைக் கிளந்து விதந்து, மெய்யுணர் வாறறலால் விளையும் அவாவறுத்தலின் ஞான விழுப்பத்து தெய்வ நறுமணத்தை, வாழ்விக்கும் தம் காப்பிய நூலுள்ளும் கவின்றமிழால் கமழவைத்தார். மற்றும், ஒழுக்கத்தின் தெளிவாகிய ஞானத்தின்வழி, புத்தர் போன்று, தாமே தன் நல்லியல்புடைய வாழ்வாலும், சிந்தனையாலும், தியானத்தாலும். உள்ளொளியாலும். தன்னை வென்று, தாமாகவே தன்னிலமர் தன்னையே கண்டு கொள்ள வேண்டுமென்பது மணிமேகலை காப்பியத்தின் படிப்பினை யாகுமென்பதைச் சாத்தனார் கூருமற் கூறியது பெரிதும் கருத்திருத்தல் வேண்டும் எனவே வாழ்விக்கும் இக்காவியம் மன்பதைக் குரியதெனக் கடைப் பிடிக்க.

பௌத்த சமயம் மிகப் பழமை சான்றதொன்று. வாழ்வாங்கு வாழ, சமய மெய்ம்முறைகளை நெறி கோலிக் காட்டும் பான்மையது: சமயச் சார்புடைய ஊற்றமாய கருத்துக்களை தன்னகத்தே உரனுடன் கொண்டு திகழ்வது. அறம் குன்றி மறம் ஓங்கி நின்ற ஞான்றெல்லாம் எண்ணி அறுதியிடுதற்கரிய கணக்கில்லாத புத்தர்கள் தோன்றி அறத்தை நிலைநாட்டி உலகிற்கு சமய வுண்மைகளைப் புகட்டியும் அறிவுறுத்தியும் வந்தார்களென்பது

'இறந்தகாலத் தெண்ணில் புத்தர்களும்
சிறந்தருள் கூர்ந்து திருவாய் மொழிந்தது'

எனும் மணிமேகலை அடிகளானுணரப்படும். பல புத்தர்களால் கையாளப்பட்டுள்ள இச்சமயத்தின் சிந்தாந்தத்தை ஆசிரியர் சாத்தனார், தாமறிந்துள்ள ஏனைய சமயங்களின் கோட்பாடு களைக் கொண்டு தெளிவுபட விளக்கியுள்ளது இறும்பூது பயப் பதாகும். உலகம் துக்கம் நிறைந்ததால், வாழ்வே வேதனை யென்றும், உலகப் பொருள்கள் அழிதலை இயல்பாகவுடையன யென்றும், அதனுன் யாதொரு பொருளினின்றும் நாம் நீங்கப் பெறின், பொருளான் துன்பமுறுதல் சிறிதும் இலதாயிற் றென்றும் பௌத்தம் நுவலும். மற்றும் அது, வாழ்வை சிந் தனைத், தெளிதல், விழிப்புநிலை, தியான இன்பம், உபவாசம் ஆகிய கலையால் சீர்பட வைத்து, உள்நின்று இலங்கும் சக்தியை அறிய முற்படல் வேண்டுமென்பதை வலியுறுத்தும் சிந்திப் பதின் வழி, காரணம் தெளிந்து நிற்க, உணர்ச்சிகள் எண் ணங்கள் மூலம் அறிவாகி நிலைத்துப் பின்னர், நம்மை விடுதலை யாக்கும் உண்மையாகிக் கனியவும் தொடங்குமென்றும், அது போது, நானெனும் முனைப்பினை விட்டொழிக்க, வாராநெறி யிலேறும் ஊக்கத்தில் ஏக்கம்மிகுந்து ஆனந்தமும், ஞானமும், நிர்வாண நிலையும் பெற இயலுமென்பது பௌத்தத்தின் கடைப்பிடியாகும்

சொல்லின்கண் தேக்க இயலாத இத்தகைய ஞானம், வழங் கக் கூடிய அறிவு போன்று பிறருக்கு வழங்குகின்ற ஞானம் பேதைமை போல் காணப்படுதல் இயல்பு. அதனுன் தன்னை வென்று ஆளும் திறம் படைத்த நிலை சித்திக்க, பிறவித் துன் பத்திற்குக்காரணமாய அவாவினை யறுத்து, பிறவிக்கேதுவாகிய

'உருவுநுகர்ச்சி குறியே பாவனை
யுள்ளவறிவினை'

முற்றும் அற்றுப்போதல் வேண்டும். மற்றும் நிர்வாணத்திற் குப் பொருளாய் விளங்கும் துன்பமில்லா நிலையுள்ள தன்மை யையடைய

குற்றமும் வினையும் பயனுந் துன்பம்
பெற்ற தோற்றப் பெற்றி கணிலையா

★ ★ ★

நிலையில வறியதுன்ப மென நோக்க
வுலையா வீட்டிற்கு றுதியாகி

அநித்தந்துக்க மநான்மா வசுசியெனத்
தனித்துப் பார்த்து பற்றறுத்தி டுதல்

என்ற மணிமேகலைவரிகள் உளவு வழியாகத் தெளியப்படுத்து கின்றதினுன், பௌத்தம். ஒழுக்கப் பெற்றியில் முயன்றுவரும் கடமையுடைமையே பெரிதும் பயன்படுமென வலியுறுத்தியது. நிலையானவற்றை விட்டு விடுதலும் நிலையற்றவையே பற்றுதலு முடையார் என்றும் துன்பத்திலுழலுவரென்பது பௌத்த சமயத்தின் உட்கருத்தாகும். மற்றும், நிலையின்மையாலேற்படும் துன்பம் நீங்க, காட்சியளவை யானும் அனுமான வளவையா னும் எளிதே அறிய இயலக் கூடாத கடவுளைப் பற்றியும் ஆத் மாவைப் பற்றியுமுள்ள தருக்கவாத ஞானமொன்றே வேண்டாற் பாலதன்றெனக்கொண்டு, தண்ணென்ற கடைப்பிடியாகிய ஒழுக்கத்து விழுத் துணையே தலை சிறந்ததென அழுத்தந்திருத் தமாக மனதில் படும்படி ஓதி, புத்தர் பிறவு ஆழியைக் கடக்க தமது அறக் கதிர் ஆழியினைத் திறம்பட உருட்டுவாராயினர். இயங்கும் ஆற்றலுடைய பூதங்களின் துணைக்கொண்டு, வழு வாத ஒழுக்கத்தினால் வாழ்வை நல்லாற்றுப்படுத்தினல், உயிரப் பாய் இயக்கும் சக்தியினியல்பு தானாகவே புலனாகுமென்பது புத்தரது உள்ளக் கிடக்கை. விழுப்பந்தரும் ஒழுக்கத்து மேன் மையினைப் பிற எவையாலும் எய்துதற்குரியதல்ல எனச் சுட்டி வாழ்விக்கும் காவியம் ஒழுக்கத்துச் சிறப்பியலபினை செவ்வனே விதித்து நிறுத்தியதூஉம கண்டு கொள்க.

ஞாலத்தின்கண், கருத்து உள்ளீடற்ற சொற்களின் முரண் பாடுகளிலும், சமயச் சார்புடைய கொள்கைப் புதர்களிலும் மனத்தை அலைக்கும்படிச் செய்து சிக்க வைக்கும் தருக்க வாதங் கள், பல மதங்களாக நிலவுதலான பௌதத சமய ஒழுக்கத்து விழுப்பம் வீறிய சாத்தனர், தம்மதம் நிறுத்தும் நோக்குடைய ராய் சில்வேறு சமயப்படிற்றுரை சிலவற்றை எடுத்தியம்பியுள் ளார். அவ்வாறு கூறுங் காலையிலும் சிலவேறு சமயங்களின் பல்வேறு தத்துவக் கருத்துக்களையும் அறிதல் முறையில் விளக்கி யுள்ளார். சிந்தனையின்றி செய்வினையுறுமெனும் சமண சமயக் கருத்தை ஏற்காது, சாத்தனர் சிந்தனைக் காரணமாகத்தான் செய்வினையுறுமெனும் பௌத்தக் கருத்தை வலியுறுத்துவர். பூதவாதத்துத் தத்துவ விளக்கத்தைச் சாத்தனர்,

'தாதகிப பூவுங் கட்டியு மிட்டு
மற்றுங் கூட்டமதுக் களி பிறந்தாங்
குற்றிடும் பூதந் துணர்வு தோன்றிகு
மவ்வுணர் வவ்வப் பூதத் தழிவுகளின்

வெவ்வேறு பிறியும் பறையோசை யிற்கெடு
முயிரோடுங் கூட்டிய வுணர்விடை பூதமு
முயிரில்லாத வுணர்வில் பூதமு
மவவப் பூத வழியவை பிறக்கு
மெய்வகை யிதுவே வேறு ரைவிகற் பமு
முண்மைப் பொருளு முலோகாய தனுணர்வே
கண் கூடல்லது கருத்தள வழியு
மிம்மை யுமிம்மைப் பயனுமிப் பிறப்பே
பொய்ம்மை மறுமை யுண்டாய் வினைதுய்த்தல்'

என விரிவாகக் கூறி காடசிப் பிரமாணமே அறிவுச் சாதன மென நம்பும் பூதவாதிகளின் கோட்பாடுகளை முற்றும் ஏற்றுக் கொள்ளற்பாலதன்றென மணிமேகலை தன் முற்பிறப்பின் வாழ்வு நிகழ்ச்சிகளை தெய்வத்தின்வழி வழுவின்றி அறிந்து கொண்டிருந்ததின் மூலம் விளங்கா நிற்கும் எனப் புலப்படுத்து வாராயினர். இதற்கு மணிமேகலை நீ. நின் பெற்றோர்களை அனுமானத்தின் மூலமன்றி எவவாறு அறிகுவை? காட்சியின் மூலமல்லாது. அனுமானத்தின் வகையாலறியப்படும் உண்மை களை மறத்தலும் மறுத்தலும் சீர்மையன்று' என்ற கருத்துபட,

'நின்
றந்தை தாயரை யனுமானத் தாலல
திந்த ஞாலத்தெவ்வகை யறிவாய்
மெய்யுணர்வின்றி மெய்ப்பொருளுணர்வரிய
வையமல்லதிது'

எனப் புகன்றது ஆய்தற்குரியது. இதன் வழி காட்சியின்றி அனுமானமும், அனுமானமின்றி அறிவும் தோன்றுவதில்லை யென்பது ஓரோ வழி துணியப்படும்.

வாழ்விக்கும் இக்காப்பியம், தெய்வங்களை நோக்கிச் செய்யும் உயிர்க் கொலை வேள்வி முதலிய தகாத செயல்களைத் தவிர்த்து. மக்கள் மனநிலை. நல்லொழுக்க நெறியில் படரும் பொருட்டு. பௌத்த சமயம் விதித்த ஒழுக்கங்கள் பலவற்றைப் பற்றிக் கூறியது அறியப் பட்ட மெய்ம்மை யாகும் அவற்றுள், மெய்த்தெளிவுக்காக. மக்கள் நோற்றுத் தம்மையே வேள்வி செய்து நிற்கும் அருநிலை, தலையாயது அதற்கடுத்தபடியாக, உயிரின் ஆக்கத்திற்கு வளரும் அறத்தினையே சிறப்பாக அறிவுறுத்தப் பட்டுள்ளது. பௌத்த சீலங்கள் யாவும் அறத்தின் நிறைவைப் பெருமையுற அளித்து மக்களுயிரை ஒளிபெறச் செய்யும் பான்மையன. மற்றும் பௌத்தப் போதனைகள் யாவும் வலியுடைய அறத்தையே குறிக்கொண்டு மிளிர்வனவாகும். ஆசிரியர் சாத்

தனர். அறத்தாறினையும் அதன் விழுப்பத்து இயலினையும் விளக்கி, ஆய்ந்துணரும் செயல்கள் யாவும் அறம மல்கும் தன்மையனவாயிருத்தல் வேண்டுமென்று சிறப்பாகக் குறிப்பிட்டு அறத்தின் தெய்வ வலிமையினை வற்புறுத்தியுள்ளார் மக்களு யிர்க்கு மிக்க ஆக்கம் தரும் அறமே விழுத்துணையனதென்பதை,

இளமையு நில்லா யாக்கையு நில்லா
வளவியவான் பெருஞ் செல்வமு நில்லா
புத்தேளுலகம் புதல்வருந்தாரார்
மிக்கஅறமே விழுத் துணையாவது

எனச் சாத்தனர் ஆன்ற அனுபவத்தறிவோடு தெளியவைத் தார். இளமை, யாக்கை, செல்வம் முதலியவற்றின் நிலையா மையும் அறத்தின் நிலைபேற்றினையும் ஈண்டு வலியுறுத்தப்பட் டுள்ளதைக் கருத்திற் பதித்திடல் வேண்டும். அறநெறி யொன்றே மனமாசகற்றி உள்ளொளியைப் பெருக்கி இறுதியில் நிர்வாணப் பெருநிலையினைக் கூட்டுவிக்கும் மாண்பினை. ஏகா ரத்தின் கண் ஓர்க. இதனன் பௌத்த சமயச் சார்பிலெழும் அறத்தின் எழுச்சியும், அதன் நிகழ்ச்சியில் உயர்ச்சியும் நனி விளங்கும்.

பொருந்து முறைகண்டு அறத்தின் ஆக்கச் சாதனையினை யறிந்து அறஞ் செய்யாரை,

தவத்துறை மாக்கள் மிகப் பெருஞ் செல்வர்
ஈற்றிளம் பெண்டிர் ஆற்றுப் பாலகர்
முதியோரென்னுன் இளையோரென்னுன்
கொடுந் தொழிலாளன் கொன்றனன் குவிப்பஇவ்
வழல்வாய்ச் சுடலை தின்னக் கண்டும்
கழிபெருஞ் செல்வக் கள்ளாட்டயர்ந்து
மிக்கநல்லறம் விரும்பாது வாழும்
மக்களிற் சிறந்த மடவோருண்டோ?

என எள்ளலுடன் இகழ்ந்து நற்றமிழ்ச் சாத்தனர் நகையினைப் பிறப்பித்தார். மற்றும் அறம் இன்னதென நன்கு புலனாக, வாழ்வுக்கு நலஞ் செய்யும் பல திறத்த அறவினைகளைக் கூறி. அறணத்தின் இலக்கனத்தை,

'அறமெனப்படுவது யாதெனக் கேட்பின்
மறவாது இதுகேள். மன்னுயிர்க்கெல்லாம்
உண்டியும் உடையும் உறையுளுமல்லது
கண்டதில்'

எனத் திறம்பட விதந்து மரணமிலாப் பெருவாழ்வின் நுட்பத்தை விளக்கியுள்ளார். மக்கள் இயற்றும் அறச்செயல் தவமெனவும், பிறப்பு இறப்பினை யொழிக்க வல்லது அறமெனவும் கருதி, அறத்தினைக் கடைப்பிடித் தொழுகுவது சால்பெனக் கொண்டு, சமயத் துறையில் பயன்மிகக் கண்ட மெய்யுணர்வினராய சாத்தனூர்.

'நல்லறஞ் செய்வோர் நல்லுலகடைதலும்
அல்லறஞ் செய்வோர் அருநகரடைதலும்

திண்ணமென அறிவுரை நிறீஇத் தெருட்டினர். மற்றும் வாழ்வில் ஆக்கஞ் செய்வன பலவற்றுள், உயிர்போன்றது அறமெனக் கொண்டு அது 'இன்றெனின் மாக்கட்கு உண்டோ ஞாலத்துறுபயன்' என அறத்தின உண்மை நலனையும் மாண்பினையும் ஒருங்கு விளைப்பாராயினர்.

உயிரியல்பை ஒடுக்கி அதன் அறிவு முயற்சிகளைப் பாழாக்கி, உயிரினத்தை உடற்றி. வேறுபாடுறுவிக்கும் பசிப்பிணியைப் பாவியென விளித்து.

குடிப்பிறப்பழிக்கும் விழுப்பங் கொல்லும்
பிடித்த கல்விப்பெரும் புணைவிடூஉம்
நாணணிகளையும் மாணெழில் சிதைக்கும்
பூண்முலை மாதரொடு புறங்கடை நிறுத்தும்
பசிப்பிணி யென்னும் பாவி,

என மனம்நொந்து மணிமேகலை ஆசிரியர் ஏசியுள்ளார் 'மக்கள் யாக்கை உணவின் பிண்ட' மென்பதையும், 'மண்டிணி ஞாலத்து வாழ்வோர்க்கெல்லாம், உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே' எனத் திறமுறக் கூறி உணவின் பிண்டம் உண்டி முதற்றாகலின, அவிழ்க் கொடையினைச் சிறக்கச் செய்தற்குரியதெனத் தெளிவித்தருளலானர். மற்றும்,

ஆற்று மாக்கள் அரும்பசி களைவோர்
மேற்றே உலகின் மெய்ந்நெறி வாழ்க்கை'

யென எடுத்திசைத்து, உயிர் வாழ்க்கைக்கு நலனும் பயனும் அளிக்கும் உணவை உயிர் மருந்தெனக் கொண்டு. அதனை உயிர்கட்கு அருளறங் காரணமாக வழங்கும் மணிமேகலையை

'உயிர் முதல்வி' எனப் புகழ் மணக்க நறுந் தமிழால் சாத்தனர் கூறியதின் நோக்கினைச் செம்மாந்து அறியலுறுதற்பாலது எனவே, பிணி நோயைப் பெருக்கும் பசியினைத் திறம்பட, களைய முயல்வது அறநெறி வழாது நிகழும் பான்மையது இதனன், அறத்தினுள் விளையும் அன்பும் நுகரும் இன்பமைதியும் அறத்தால் வருவதூஉம் கண்டு கொள்ளப்படும். பொது வாயிலங்கும் இத்தகைய அறநெறியினை வாழ்விக்கும் காவியம் விளக்கிச் சமயச் சார்போடு வழங்கினதினன், அது வாழ்வில் உயர்வு தாழ்வு கற்பித்தலையும். கொள்ளலையும் ஏற்காதது உன்னற்பாலது.

தாங்கற்கரியதாகும் பொல்லாப் பசிப்பிணியினைப் போக்குதலாகிய பேரறத்தின் பெருமையினைச் சாத்தனர். மணிமேகலை எவ்வண்ணம்

'காணர் கேளார் கால் முடப்பட்டோர்
பேணுநர் இல்லோர் பிணி நடுக்குற்றோர்
யாவரும் வருக என இசைத்து

அவர்கள் தம் கைப்பகம் நிரம்புமாறு, தன்பாலுள்ள அன்னத்தால் பலரையும் வாழ்விக்கும் பெற்றியுடைய அமுதசுரபி கொண்டு, உயிர் மருந்தினை நல்கினள் என உரைக்கும் பரிவுரைகள் வழி தெளிய வைத்தலால். இறப்பு நேராமல் உடலில் உயிர் நிலைகொள்ளுமாறு புரத்தல் யாவருக்கும் உரிய முதற் பெருங் கடமை யென ஓர்க. அமுதசுரபி, ஆபுத்திரன் வழி பாண்டிய நாட்டுப் புசிப் பிணிபினையும், மணிமேகலை வழி, சோணாட்டுப் புகாரிலும், சேரநாட்டு வஞ்சியிலும், தொண்டை நாட்டுக் கச்சிமாநகரிலும் புகுந்து சென்று, பசிப்பிணியை முழுதும் நீக்கியதன் மூலம், தமிழுலகத்தை, சகோதர நேயமொடு, வாழ்விக்கும் காவியம், ஒன்ருக்கிய அருஞ் செயல் பெரிதும் நினைவு கூர்ந்து இன்புறற் பாலது

மதிப்புரை.

தமிழ் நூல்

புலவர் சரவணத் தமிழன் எழுதிய தமிழ் நூல் எழுத்து, சொல், தொடர் ஆகிய மூன்றனது இலக்கணத்தையும் கூறுவது. 184 பக்கங்களை உடைய இந்நூலின் விலை ரூபாய் நான்கு. தண்டமிழ் அறிஞர் தேவநேயப்பாவாணர், பேராசிரியர், அடிகளாசிரியர். பாவலர் பாலசுந்தரம், தென்மொழி ஆசிரியர் பெருஞ்சித்திரனார் ஆகியோர் வாழ்த்துரை வளங்கியுள்ளனர். தமிழறிஞர் பாவாணரின் மதிப்புரை நூலின் நிறைகுறைகளைச் சுருங்கிய அளவில் சுட்டிக்காட்டுகிறது

நூற்பாக்கள் ஓசை இனிமையுடையனவாக இல்லை. நூற்பாவின் பொருளுக்கும் ஆசிரியர் கூறும் உரைக்கும் வேறுபாடு உள்ளது. எடுத்துக் காட்டாக "ஆய்தம் பிறமொழி சிறப்பொலி பெயர்ப்பே" என்னும் நூற்பாவைக் கூறலாம் 'ஆய்த வெழுத்துப் பிறமொழியில் உள்ள சிறப்பொலியைப் பெயர்த்து அமைத்துக்கொண்ட எழுத்து' என்பதுதான் அந்த நூற்பாத் தரும் பொருள் ஆனால். ஆசிரியரோ "ஆய்தம் பிறமொழிகளின் சிறப்பொலியைப் பெயர்க்கத்துணையாம்" என்று அந் நூற்பாவுக்கு உரை எழுதுகிறார் அவர் கருதும் பொருளை அந் நூற்பாத்தாராது. பிறமொழிச் சிறப்பொலி என வல்லொற்று மிகாததும் பிழையே.

பிழை திருத்தம் கூறும் பகுதியில் திருத்தம் என்பதற்கு மாறாக பிழைப்பு என்னும் சொல் காணப்படுகிறது. பிழைப்பு என்னும்சொல் திருத்தம் என்னும் பொருளைத்தரும் என்பதற்குச் சான்றில்லை. புறப்பொருள் வெண்பாமாலையில் புறப்பொருள் துறைகளுக்கு எடுத்துக்காட்டாக வரும் பாடல்களின் பொருளைச் சுருக்கம'கக் கூறுவது என்னும் பொருளில் தொன்று தொட்டு வழங்கி வரும் கொளு என்னும் சொல்லை இருப்பிடத்தைக் குறிப்பதற்குக் கையாளுவதை ஏற்பதற்கில்லை. இயற்றமிழ் பயிற்றகம் என்பதுதான் பிழையற்ற தொடர். இயற்றமிழ்ப் பயிற்றகம் என்று ஒற்று மிகுத்து எழுதுவது பிழையே. ய, ர, ழ என்னும் மூன்றீற்றுச் சொற்களும், மென்றொடர்க் குற்றியலுகர வீற்றுச சொற்களும் வேற்றுமைத் தொகையில் வல்லொற்றுமிகும் என்று தொல்காப்பியம் கூறினும், தொல்காப்பியத் தொகை மரபில் இரண்டாம் வேற்றுமைத்திரிபு கூறும் நூற்பாவினையும் (தொல்-எழுத்து 158) அதற்கு இளம்பூரணர் நச்சினார்க்கினியா ஆகியோர் தரும் உரையையும் ஊன்றிநோக்குவோர் மேற்கூறிய நான்கு ஈற்றுச்சொற்களும் இரண்டாம் வேற்றுமைத் தொகையில் ஒற்று மிகாமலே வரும என்னும் உண்மையை உணருவர் தழீஇய சாயலவர். சாம்போதும் தமிழ்படித்துச் சாகவேண்டும் என்னும் இலக்கிய வழக்கும் நோக்குக. நூலாசிரியரின் உரைநடையும் செம்மைமாக இல்லை 334-ஆம் நூற்பாவுரையுள் ஒன்றுமே இல்லாதமையைச் இனைமைச்சொல் உணர்த்தும், என்னிடம் இருப்பது ஐந்தன்று; இரண்டு. என்பது செம்மை. என்றுள்ள தொடரெலாம் வழு பிழைகள் மிகுந்துள வேனும் நூலாசிரியரின் புதிய இலக்கண நூல் எழுதும் ஆர்வம் பெரிதும் பாராட்டத்தக்கதே யாகும். தொடர்ந்து நன்முறையில் பாடுபட்டால் நூலாசிரியர் எதிர்காலத்தில் நல்ல இலக்கண நூலை உருவாக்கலாம்.